# Saturday மெயில்

02 - 89

25-06-2011
பக்கங்கள்: 24
விலை: 15/=

සැටඩේ මේල්

A Fascinating Weekly Bulletin


UNIVERSITY OF ... LIBRARY
27 JUN 2011
PERIODICALS DIVISION



# பிளாஸ்ரிக்கிலுள்ள இரசாயனங்களால் குழந்தைகளுக்கு ஆபத்து

அடுத்த பக்கம் புரட்டுங்கள்

Registered as a Newspaper at G.P.O.

# வாழ்க்கை 40 வயதில் தொடங்குகிறதா அல்லது முடிகிறதா...?

வாழ்க்கை 40 வயதில் தான் தொடங்குகிறது என்று ஒரு பேச்சுக்குக் கூறுவார்கள். ஆனால், அது முற்றிலும் பொய் என்கின்றனர் சுகாதாரத்துறையைச் சார்ந்தவர்கள்.

40 வயதாகின்றபோது எல்லாமே சரிவடையத் தொடங்குகின்றது என்பதுதான் அவர்களின் கருத்தாகும்.

பிரிட்டனில் நடத்தப்பட்ட புதிய ஆய்வொன்றின் பிரகாரம் 41 வயதில்தான் பிரிட்டிஷ் மக்கள் எல்லா விடயத்திலும் கண்டபடி நடக்க ஆரம்பிக்கின்றனர். அளவுக்கு அதிகமாகச் சாப்பிட ஆரம்பிக்கின்றனர்.

அதுவரை செய்துவந்த வழமையான உடற்பயிற்சிகளில் அசிரத்தையுடன் நடந்து கொள்கின்றனர். 40 வயதுக்கு மேற்பட்டவர்களுள் 40 வீதத்துக்கும் அதிகமானவர்கள் இனி என்ன நடந்தால் தான் என்ன என்ற நிலைக்கு வந்து விடுகின்றனர்.

இதனால் பல நோய்களுக்கான ஆபத்தைக் குறிப்பாக நீரிழிவு நோய் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர்.

நீரிழிவு நோய் வாரத்தின் ஆரம்பத்தை முன்னிட்டு தான் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வின்போது கேள்விகளுக்குப் பதிலளித்த பலர் கடிகாரத்தை மீண்டும் மறுபக்கம் திருப்ப முடியாதா என்று வேதனை தெரிவித்துள்ளனர்.

காலத்தைப் பின்னோக்கி நகர்த்த முடியுமானால் தாங்கள் எடை கூடுவதையும் தவிர்த்துக் கொள்ளலாம் என்று சிலர் வேடிக்கையாகவும் பதில் கூறியுள்ளனர்.



பிரிட்டனில் வருடாந்தம் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் இரண்டாம் நிலை நீரிழிவு நோய் உள்ளவர்களாக இனங்காணப்படுகின்றனர். தினசரி 275 பேர் அல்லது ஐந்து நிமிடத்துக்கு ஒருவர் என்ற ரீதியில் புதிய நீரிழிவு நோயாளர்கள் இனங்காணப்படுகின்றனர்.

பிரிட்டிஷ் மக்களின் சுகாதாரத்துக்குப் பாரிய அச்சுறுத்தலாக நீரிழிவு நோய் மாறியுள்ளது. இந்த ஆய்வில் கலந்துகொண்டவர்களில் 42 வீதமானவர்களுக்கு இரண்டாம் நிலை நீரிழிவு என்றால் என்னவென்றே தெரியாது.

நீரிழிவு நோய் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் பற்றி இதில் பங்கேற்ற கால்வாசிப் பேருக்கு எதுவும் தெரியாது. அவர்கள் இதனால் ஏற்படக்கூடிய ஏதாவது ஒரு தாக்கம் பற்றியேனும் அறிந்திருக்கவில்லை.

நீரிழிவு நோயால் அங்கங்கள் துண்டிக்கப்படக்கூடும். இருதயக்கோளாறுகள் ஏற்படக்கூடும். குருட்டுத்தன்மை ஏற்படக்கூடும் என எதையுமே இவர்கள் அறிந்திருக்கவில்லை. லோட்ஸ் பார்மஸி நிறுவனம் இந்த ஆய்வை நடத்தியுள்ளது.

## இதில் பெண்கள் முன்னிலையில்...

முகத்துக்கு எதிரே பாராட்டி விட்டு முதுகுக்கு பின்னே பழித்து பேசுவதில் ஆண்களைவிட பெண்களே முன்னிலை வகிப்பதாக ஆஸ்திரேலிய ஆய்வு கூறுகிறது.

சூரியா மெயில் இதழில் வெளியான ஆய்வு முடிவு 2000 ஆண் பெண்களிடம் தகவல்கள் கேட்கப்பட்டன.அதில் பல வியப்பூட்டும் விடயங்கள் தெரியவந்தன.

வெளியிடங்களுக்கு செல்லும்போது பணத்தை யாராவது தவறவிட்டால் அதை எடுத்து உரியவரிடம் அளிப்பதில் ஆண்களைவிட பெண்கள் ஆர்வம் காட்டுவதில்லை.அதே நிலைதான் உதவி செய்வதிலும் சுமைகளை தூக்கிக் கொண்டு முதியோர் சிரமப்படுவதை பார்த்தால் அவர்களுக்கு பெண்களைவிட ஆண்களே உதவுகின்றனர்.

இரவு உணவின்போது கணவர் அல்லது காதலரை எதிர்பார்ப்பதில்லை என 55 சதவீத பெண்கள் தெரிவித்தனர்.வேலையில் தங்கள் அந்தஸ்தை உயர்த்திக் கொள்ள பொய் சொல்ல தயங்குவதில் என்று இரு தரப்பினரும் கூறினர்.நண்பர்கள், உறவினர்கள் எதிரில் பாராட்டிவிட்டு அவர்கள் சென்ற பிறகு புறம் பேசுவோர் ஆண்களைவிட பெண்கள் அதிகம்.ஒரு நாளில் குறைந்தது 2 அல்லது 3 முறையாவது சுயநலமான செயல்களில் ஈடுபட தவறுவதில்லை என்று 10இல் 5 ஆண், பெண்கள் ஒப்புக்கொண்டனர்.

## பிளாஸ்...

உணவு பொதியிடுவதற்குப் பயன்படுத்தப்படும் பிளாஸ்ரிக் பொருட்களிலுள்ள இரசாயன பதார்த்தமொன்றுக்கும் குழந்தைகளுக்கு ஏற்படும் சுவாசக் கோளாறுகளுக்கும் இடையில் தொடர்புள்ளதாக ஆய்வொன்றின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

அதிகளவில் பிஸ்பெனல்-ஏ வை *(Bisphenel A)* கொண்டுள்ள கர்ப்பமுற்றிருக்கும் பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு முதல் ஆறு மாதத்தில் சுவாசக்கோளாறு ஏற்படுவதற்கான வாய்ப்பு இருமடங்குள்ளதென மேற்படி ஆய்வின் மூலம் அறியப்பட்டுள்ளது.

குழந்தைகளுக்கு வீஸிங் எனும் இந்த சுவாசக்கோளாறு காணப்படுவதானது நுரையீரல் சேதம்,ஆஸ்துமா,பீனிசம்,ஒவ்வாமை அல்லது தொற்று நோய்கள் போன்றன ஏற்படுவதற்கான அறிகுறியாக இருக்கலாம்.

பிஸ்பெனல் ஏ அல்லது பீ.பி.ஏ. எனும் இரசாயனம் பிளாஸ்ரிக்கை இறுக்கமாக்குவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. உலகில் அதிகமாகத் தயாரிக்கப்படும் இரசாயனப் பொருட்களில் இதுவும் ஒன்றாகும். தினமும் பயன்படுத்தப்படும் டஸின் கணக்கிலான பொருட்களில் இந்த இரசாயனப் பதார்த்தம் கலக்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கான போத்தல்கள், இறுவெட்டுக் கொள்கலன்கள்,உணவு மற்றும் குடிபானம் பொதியிடப்பட்ட பொருட்கள் முதலானவற்றிலும் இந்த இரசாயன பதார்த்தம் கலக்கப்பட்டுள்ளது.

இந்த இரசாயன பதார்த்தம் உடலில் கலந்தால் ஹோமோன்களைப் போன்று செயற்படுவதாக விஞ்ஞானிகள் பலர் நம்புகின்றனர்.

இந்தப் பரிசோதனை பல விலங்குகளிடம் மேற்கொள்ளப்பட்டபோது பாதுகாப்பானது எனக் காட்டிய போதிலும் வேறு பல பரிசோதனைகள் இந்த பிஸ்பெனல் ஏ யினால் மார்பகப் புற்று நோய் மற்றும்ஈரல் பாதிப்பு பருமனான சரீரம்,சர்க்கரை நோய்,குழந்தைப்பேறு பிரச்சினைகள் போன்ற பாதிப்புகள் ஏற்படலாமெனத் தெரிவித்துள்ளன.

அமெரிக்காவில் கடைசியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் கர்ப்பமுற்ற 367 பெண்களிடம் பீ.பீ.ஏ. மட்டம் சோதிக்கப்பட்டது. அவர்களிடம் 16 மற்றும் 26 ஆவது கர்ப்ப வாரங்களில் இந்த இரசாயன மட்டம் ஏற்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இவர்களில் 16 ஆவது வாரத்தில் அதிக பீ.பி.ஏ. மட்டத்தைக் கொண்டிருந்த கர்ப்பிணிகளில் 99 சதவீதமானோர் சுவாசக்கோளாறு கொண்ட குழந்தைகளைப் பிரசவிப்பதற்கான வாய்ப்பு இரு மடங்காக இருப்பது கண்டறியப்பட்டது. அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் ஆறு மாத வயதில் சுவாசக்கோளாறை எதிர்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் கர்ப்பத்தின் 26 ஆவது வாரத்தில் அதிக பீ.பி.ஏ. அளவைக் கொண்டிருந்த பெண்கள் இந்த நிலையுடன் தொடர்புபடவில்லை.

இது குறித்து நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கையில், ஹோர்மோன்களை குழப்பத்திற்குள்ளாக்கும் இரசாயனங்கள் இப்பாதிப்புகளுக்குக் காரணமாகவிருக்கலாம் எனவும் கர்ப்பிணிப் பெண்கள் கர்ப்ப காலத்தின் முக்கிய பகுதிகளில் பீ.பீ.ஏ. கொண்ட பொருட்களைத் தவிர்க்க வேண்டும் எனவும் கூறியுள்ளனர்.

இந்த இரசாயனத்துடன் தொடர்புபடுவதை நாம் குறைத்துக்கொள்ள வேண்டியதை இந்த ஆய்வு மேலும் வலியுறுத்துகிறது. முக்கியமாக கர்ப்பமுற்ற பெண்கள் இதை மிகவும் குறைத்துக்கொள்ள வேண்டுமென அமெரிக்காவின் இரசாயன,சுகாதார மற்றும் சூழல் மேற்பார்வை அமைப்பின் இயக்குநர் எலிசபெத் செல்டர் கிறீன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அடம் ஜே.ஸ்பெனியர் என்பவர் தலைமையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஐரோப்பிய ஒன்றியத்தில் மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான பொருட்களில் பீ.பீ.ஏ.கலக்கப்படுவதை தடை செய்த முதல் நாடாக டென்மார்க் விளங்கியது. ஐரோப்பிய ஒன்றியம் குழந்தைகளுக்கான போத்தல்களில் இந்த இரசாயனத்தை கலப்பதற்கு கடந்த வருடம் தடை விதித்தது. கனடா மற்றும் அமெரிக்கா ஆகியனவும் புதிய கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தியுள்ளன்.



# அருந்ததிராயின் அறிவுரை

அருந்ததிராய் உலகமே நேசிக்கும் பெண்மணி! விருது பெற்ற எழுத்தாளர்! அவர் சொல்கிறார்...

என் போராட்டக் குணத்துக்கு ஏற்ப 17 வயதில் வீட்டைவிட்டு வெளியேறினேன். வாழ்க்கைப் பாடத்தை நான் தெருவில்தான் கற்றேன். அம்மாவிடம் இருந்து கற்றுக்கொண்ட முக்கிய விடயம், ஒரு பெண் சுதந்திரமாக வாழணும்னா கட்டாயம் அவள் சம்பாதிக்கணும். இந்த எண்ணத்தை என் சிறுவயதிலேயே அம்மா எனக்குள் விதைத்துவிட்டார். பணத்துக்காக ஒருவரைச் சார்ந்தபடி சுதந்திரமாக வாழத் தலைப்பட்டால் அது ஒருபோதும் நடக்காது என்பார் அம்மா.

எனது அம்மாவும் அப்பாவும் பிரியும்போது எனக்கு 3 வயது. அதன்பிறகு நாங்கள் ஊட்டிக்கு வந்தோம். அப்போது அம்மாவுக்கு ஆஸ்துமா கடுமையாக இருந்தது. அப்போது எங்கள் வீட்டில் குருசம்மா என்ற பெண் உதவியாளர் இருந்தாங்க. இப்பவும் அவர் கோட்டாயத்தில் உள்ள எங்கள் வீட்டில் வசிக்கிறார். அவருக்கு 90 வயசு ஆகிறது. இப்பவும் ஆரோக்கியமாக இருக்காங்க. குருசம்மா அற்புதமா சமைப்பாங்க. எனக்காக ஸ்பெஷலா சமைப்பாங்க. குருசம்மா எனக்கு இன்னொரு அம்மா.

எப்போதுமே என் எழுத்தை நான் முதுமை, இளமை என்று தரம்பிரிக்க விரும்புவதில்லை. ஒரே விடயத்தை மட்டுமே தொடர்ந்து செய்துகொண்டிருக்கும்போது அதற்கு முதுமைக்கான வாய்ப்பு உண்டு. ஆனால், நான் அதோடு பல விடயத்தில் ஈடுபட்டிருக்கிறேன். அடுத்து நான் ஒருநாவல் எழுதினால் அதில் முதுமை இருக்குமா என்பதைக் கண்டுபிடித்துவிடலாம்.

தன்னைத் தானே குறுக்கிக்கொண்டு மன அழுத்தத்தோடு தனிமையில் வாழும் திருமணமான பலரை எனக்குத் தெரியும். கண்ணீரோடு சேர்ந்து வாழ்வதை விட விவகாரத்து பெற்று பிரிந்துவாழ்வது நல்லது. இது எனது சொந்தக் கருத்து.

ஆண்-பெண் உறவுகளின் ஆழம் பழைய காலம் மாதிரி இப்போது இல்லை. பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்ற பெண்களுக்குத் தேவையான சந்தோஷம் கிடைக்கலைன்னா அவர்கள் தலையைக் குனிந்து கொண்டிருக்கத் தயார் இல்லை. தங்கள் வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கிற தைரியம் இன்றைய பெண்கள் கிட்ட இருக்கு.

சில விடயத்தை நான் வெளிப்படையா பேசும்போது நான் மேற்கத்திய கலாசாரத்தை ஆதரிக்கிறேனோ என்று நினைத்துவிடாதீர்கள். எப்போதும் கட்டளைகளை ஏற்றுக்கொண்டு அதிருப்தியோடு வாழ்வதைவிட விவாகரத்து நல்லதுதான். பெருகிவரும் விவாகரத்துகள் சமூகத்தை எதிர்மறையான கோணத்துக்குக் கொண்டு போகிறது என்று சிலர் சொல்வதும் சரியல்ல.

எனக்கு நடிப்பதில் ஆர்வம் கிடையாது. கேரக்டருடன் ஒன்றி நடிப்பது என்பதெல்லாம் என்னால் முடியாத காரியம். அப்படியிருந்தும் ‘மாசே சாஹிப்’ படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டதே ஒரு சினிமா எப்படி உருவாகிறது என்பதைத் தெரிந்து கொள்ளத்தான். அந்தப்படத்தில் நடித்தபோது தான் படத்துக்கு திரைக்கதை எழுதும் அனுபவம் கிடைத்தது. திரைக்கதை எழுதுவதில் கூட நிறைய கட்டுப்பாடுகள் இருக்கின்றன. நல்ல நாவல் எழுத என்னை உற்சாகப்படுத்திக் கொள்ளவே இந்தத் திரைக்கதையை எழுதினேன்.



நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஒருநாள் திகார் ஜெயிலில் இருக்க வேண்டியதாகிவிட்டது. கசப்பான அனுபவம் அது. கொலை செய்தவர்களும் கொள்ளைக்காரர்களும் வெளியே சந்தோஷமாய் உலா வரும்போது சிறு குற்றங்களைச் செய்தவர்கள் அங்கே அல்லல்படுவதைப் பார்க்க சங்கடமாக இருந்தது. இந்தியாவில் கிரிமினல்கள் ஜெயிலுக்கு வெளியில் அதிகம். இது ஜனநாயகத்துக்கு அவமானம்.



எனக்குக் கடலைவிட காடுதான் பிடிக்கும். என்றாலும் பிடித்த இடத்தில் வாழக்கூடிய ஆள் நானில்லை. நான் நாடோடி மாதிரி. முதுமைக் காலத்தில் கூட நாடு விட்டு நாடு பறந்து கொண்டே இருப்பேன். என்னால் ஓரிடத்தில் நிலையாக இருக்க முடியாது.

என் இளமைக்குக் காரணம் 21 வயதில் இருந்தே தினமும் ஒருமணி நேரம் யோகா என்பது என் அன்றாட வாழ்க்கையாகிவிட்டது. சில ஆண்டுகள் ஏரோபிக் நடனப்பயிற்சியாளராகவும் இருந்தேன். கட்டணம் கொடுத்து படிக்க முடியாத சூழலில் தான் அங்கே பயிற்சியாளராக மாறினேன். எழுத்தாளராக இருந்து வாழ்க்கையை ஓட்ட முடியலை. அதனால் முன்பு 9 வருடங்கள் ஏரோபிக் பயிற்சியாளராகவும் நீடித்தேன்.



உலகம் முழுக்க சுற்றிக்கொண்டிருந்தாலும் வருடத்துக்கு இரண்டு மூன்று தடவையாவது கோட்டாயத்தில் உள்ள அம்மா வீட்டுக்கு வந்துவிடுகிறேன். என் சகோதரர் லலித் கொச்சியில் குடும்பத்துடன் வசிக்கிறார்.

பிடித்தது கேரள ஸ்பெஷலான சாதம்-மீன் குழம்பு. அதிலும் ‘மத்தி மீன்’ என்றால் விரும்பி சாப்பிடுவேன். ஏதாவது ஒரு கூட்டுத் துவையல் உணவில் கட்டாம் இடம்பிடித்திருக்கும் இத்தனைக்கும் காலை உணவு வெறும் பழங்கள் தான். மதியம் மட்டும் திருப்தியான சோறு சாப்பாடு.

ரொம்ப பிடித்த உடை புடைவை தான். பயண நேரத்தில் சௌகர்யத்துக்காக ஜீன்ஸ், டீசேர்ட்!

# அழிவடையும் உயிரினங்கள்

உலகளாவிய ரீதியில் சூழல் நெருக்கடிகள் அதிகரித்துச் செல்வதனால் மனிதன் மற்றும் புவிவாழ் அனைத்து உயிரினங்களும் சவால்களை எதிர்நோக்கியுள்ளன. குறிப்பாக மனிதனின் பொறுப்பற்ற நடவடிக்கைகளினால் உலகில் அதிகளவான உயிரினங்கள் அழிவடைந்துள்ளதுடன் பல உயிரினங்கள் முற்றாக அழியும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

காலத்திற்குக் காலம் புவிச் சூழலில் மாற்றங்கள் நிகழ்கின்றன. இவ்வாறான மாற்றங்கள் சூழலிலுள்ள உயிரினங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பெரும்பாலான உயிரினங்கள் சூழல் மாற்றத்திற்கேற்ப தம்மை இசைவுபடுத்திக் கொள்கின்ற போதிலும் சில உயிரினங்கள் அழிவடைகின்றன.

கைத்தொழிற்புரட்சியானது மனிதனின் அனைத்து நடவடிக்கைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியதைப் போலவே சனத்தொகையின் துரித அதிகரிப்பிலும் முக்கிய செல்வாக்குச் செலுத்தியது. இதனால் பெருமளவில் காடுகள் அழிக்கப்பட்டு அங்கு மனிதன் குடியிருப்புகளை அமைக்கத் தொடங்கியமையால் பல்வேறு உயிரினங்களும் தமது இருப்பிடங்களை இழக்கத் தொடங்கின. இதனால் அவை படிப்படியாக அழிவடைந்து செல்கின்றன.

அது மட்டுமன்றி விறகு, மரத் தளபாடங்கள் உள்ளிட்ட பல்வேறு பிறதேவைகளுக்காகத் தொடர்ச்சியாகக் காடுகளை மனிதன் அழிப்பது அதிகரித்துள்ளமையால் பல்வேறு உயிரினங்களும் அழிவடையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக அயன வலயத்திலுள்ள மழைக்காடுகளான அமேசன் காடுகள், கொங்கோ காடுகள், யாவா, போர்ணியோவிலுள்ள மழைக்காடுகள் போன்றன குடியிருப்பு, விவசாயம் உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்காக அழிக்கப்பட்டு வருவதால் அங்குள்ள பல பறவைகள், விலங்கினங்கள் என்பன அழிவடைந்து வருகின்றன. அதிகரித்த உயிர்ப் பல்வகைமையைக் கொண்ட அமேசன் காடுகளின் அழிவானது பல்லாயிரக்கணக்கான உயிரினங்களின் நிலைத்திருப்பிற்கு சவாலாகவே உள்ளது.

அதுமட்டுமன்றி மனிதனின் பொறுப்பற்ற நடவடிக்கைகள் சூழலினை அதிகளவில் மாசடையச் செய்கின்றன. கைத்தொழில் நடவடிக்கைகளின் போது அதிகளவான கழிவுகள் சூழலுக்குள் விடப்படுவதால் அவை உயிரினங்களின் வாழ்வியற் கோலங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. நீர் நிலைகளினுள் இரசாயனக் கழிவுகள் கொட்டப்படுவதனால் அதிகளவிலான மீன்கள் மற்றும் ஏனைய நீர் வாழ் உயிரினங்கள் கொல்லப்படுகின்றன.

அதுமட்டுமன்றி பச்சையவீட்டு வாயுக்கள் அதிகளவில் வளிமண்டலத்தினுள் விடப்படுவதனால் புவி விரைவாக வெப்பமடைகின்றது. புவி வெப்பநிலை அதிகரிப்பானது உலகளாவிய ரீதியில் காலநிலை மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றது. இது உயிரினங்களின் வாழ்வியற் கோலங்களில் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றது. காலநிலை மாற்றமானது உயிர்ப்பல்வகைமையினை சீரழிப்பதுடன், அவற்றின் அழிவுக்கு வழிகோலுகின்றது.

அதுமட்டுமன்றி இயற்கையின் செயற்பாடுகளிலும் உயிரினங்கள் அழிவடைந்து செல்கின்றன. காட்டுத் தீ அனர்த்தம் காரணமாக அதிகளவான உயிரினங்கள் அழிவடைந்துள்ளன. 1997 இல் இந்தோனேசியாவில் ஏற்பட்ட பாரிய காட்டுத் தீ அனர்த்தத்தினால் 4,000 ஏக்கர் காடுகள் முற்றாக எரிந்ததுடன் அங்கிருந்த பல்லாயிரக்கணக்கான உயிரினங்களும் அழிவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அமேசன் காடுகளில் சேனைப் பயிர்ச் செய்கைக்காக காடுகளை எரியூட்டுவதனால் அடிக்கடி ஏற்படும் காட்டுத் தீ அனர்த்தங்களில் அதிகளவான காட்டு வாழ் உயிரினங்கள் அழிவடைகின்றன.

மேலும் வெள்ள அனர்த்தம், சூறாவளி, எரிமலை, கடல்கோள் என்பவற்றினாலும் உயிர்ப் பல்வகைமைக் கோலத்தில் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. கடந்த வருடம் அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் அதிகளவான காட்டு விலங்குகள் உயிரிழந்ததுடன், பாம்புகள் போன்றவை குடியிருப்புகளை நோக்கி படையெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

புவி வெப்பநிலை அதிகரிப்பு, ஓசோன் படல துவாரம் என்பவற்றின் தாக்கத்தினால் அந்தாட்டிக்காவின் பனிப்படலங்கள் உருகிக் கடலினுள் கலக்கின்றன. இதனால் துருவக் கரடிகள், சீல் மீன்கள் உள்ளிட்ட குளிர் வலயத்திற்கே உரிய உயிரினங்கள் அழிவடைந்து செல்கின்றதை அவதானிக்க முடிகிறது.

எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு உலகில் அழிவடைந்து செல்லும் விலங்குகள், பறவைகள் போன்றனவற்றைப் பாதுகாக்கும் முயற்சியில் பல்வேறு சூழல் நலன் பேணும் அமைப்புகளும் ஈடுபட்டுள்ளன.

அருகிவரும் உயிரினங்களைப் பாதுகாக்கும் அமைப்பான சர்வதேச சூழல் உயிரிகள் பாதுகாப்பு அமையம் [ஐ.யூ.சி.என்.] அழிவை எதிர்நோக்கியுள்ள உயிரினங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

அவற்றில் ஜாவாபுலி, கரிபியன் சீல் மீன், ஸ்ரெல்லர் கடல் பசு, யானைப் பறவை, கடல் சிட்டுக் குருவி, பயணப் புறா என்பன அருகி வரும் உயிரினங்களாகும்.

அதுமட்டுமன்றி ஹவாயன் காகம், வையோமிங் தேரை, சொகோரோ புறா, சிவப்பு வால் கறுப்பு சுறா போன்றனவும் அழிவடையும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன.


மேலும் மிகவும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள உயிரினங்களான மலை கொரில்லா குரங்கு, பக்ரைன் ஒட்டகம், எதியோப்பிய ஓநாய், அரகன் காட்டு ஆமை, சுமாத்திரா காண்டா மிருகம், ஜாவா காண்டா மிருகம், வடக்கு வெள்ளை காண்டா மிருகம், பிலிப்பைன் கழுகு, பிறவுண் கிலந்தி குரங்கு, தீவு நரி, சீன முதலை என்பனவாகும்.

அத்துடன் நீலத் திமிங்கிலம், ஆசிய யானை, இராட்சத பண்டா, பனிப்புலி, ஆபிரிக்க காட்டு நாய், பச்சை கடலாமை, புலி போன்றன மிக விரைவில் அழிவடையவுள்ள விலங்குகளாகும்.

எனவே சுழற்தொகுதி என்பது பல்வேறு உயிரினங்களின் பிணைப்பைக் கொண்டது. அதில் செயற்படும் ஆரோக்கியமான உணவுச் சங்கிலி பரிமாற்றமே நீண்ட சிறந்த உயிர்ப் பல்வகைமையை ஏற்படுத்தும். புவியிலுள்ள உயிரினங்கள் அழிவடைந்தால் மனிதனின் நிலைத்திருப்பும் கேள்விக்குறிதான்.

த.கஜலக்ஷ்மி





# இலங்கையை வாட்டும் போஷாக்குக் குறைபாடு



சனத்தொகைக்கு ஏற்ப எமது நாட்டில் விவசாயம் தன்னிறைவு அடையாததன் விளைவாக போஷாக்கற்றதொரு எதிர்கால சந்ததி உருவாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

கர்ப்பிணிகள்,சிறுவர்கள்,நிறைகுறைந்த பிள்ளைகள், வயதுக்கேற்ப வளர்ச்சியடையாத குழந்தைகள், போஷக்கற்ற குழந்தைகள் தொடர்பில் வெளிவரும் தகவல்கள், புள்ளிவிபரங்கள் அதிர்ச்சித் தரக்கூடியவையாக உள்ளதுடன், எதிர்கால இலங்கை போஷாக்கற்றதொரு தேசமாகப்போவதையே எடுத்துக் காட்டுகின்றன.

உணவுப் பரிமாற்றலில் மாற்றங்கள் நிகழ்கின்றபோதே நாட்டில் போஷாக்கற்ற பிரிவினர் உருவாகின்றனர். அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு,சனத்தொகைப் பெருக்கம்,அனர்த்தங்கள், சிறந்த உணவுகளை களஞ்சியப்படுத்தாமை போன்றவை எமது எதிர்கால சந்ததிகள் போஷாக்கற்றதாக மாற காரணமாகியுள்ளன.

இது தொடர்பாக சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் டபிள்யூ. எம்.பீ.வன்னிநாயக்க கூறுகையில்; 'நுவரெலியா மாவட்டத்தில் 33 வீதமானர்கள் போஷாக்கு குறைபாடுடையவர்களாக இனம் காணப்பட்டுள்ளனர். இதனால் நிறை குறைந்த பிள்ளைகளின் பிறப்பு வீதம் அதிகரித்தும் காணப்படுகிறது.

இலங்கையில் போஷாக்கு குறைபாடு தேசிய ரீதியில் 15 வீதமாக காணப்படுகின்ற போதிலும், தோட்டத் தொழிலாளர்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற நுவரெலியா மாவட்டத்தில் 32 வீதமாக இது அதிகரித்துக் காணப்படுகின்றது.

அத்தோடு, இம் மாவட்டத்தில் வாழ்கின்ற மக்கள் மத்தியில் முறையான போஷாக்கு தொடர்பான அறிவின்மை, போஷாக்கு தொடர்பான செயற்றிட்டங்கள் முறையாக அமுல்படுத்தப்படாமை, பொருளாதார வசதிகள் குறைந்த மக்கள் இம் மாவட்டத்தில் அதிகமாக வாழ்கின்றமை, போஷாக்கு தொடர்பான விழிப்பூட்டல் நடவடிக்கைகள் தமிழ் மொழியில் இடம்பெறாமை,போதிய வழிகாட்டல் இல்லாமை போன்ற காரணங்களால் மத்திய மாகாணத்தில் போஷாக்கு குறைபாடுள்ளவர்கள் அதிகமாக காணப்படுகின்றனர்.

இதனை நிவர்த்தி செய்யும் நோக்கில் சுகாதார அமைச்சு,மாவட்ட ரீதியாக தாய்-சேய் நலன் தொடர்பில் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையின் வடக்கு,கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளிலுள்ள 5 வயதிற்கு குறைந்த சிறுவர்களிடம் போஷாக்கின்மை அதிகமாக உள்ளதாக யுனிசெப், உலக உணவுத் திட்டம் ஆகியவை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக, யுத்தத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியில் போஷாக்கு குறைந்த சிறுவர்கள் மட்டக்களப்பில் 53 வீதமாகவும், திருகோணமலையில் 45 வீதமாகவும் அம்பாறையில் 44 வீதம் அடிப்படையில் காணப்படுவதுடன் மலையக பகுதிகளில் குறைந்த எடையுடன் பிறக்கும் போஷாக்கு குறைந்த நிலை அதிகமாக காணப்படுகின்றது.

இலங்கை ஒரு விவசாய நாடாக காணப்பட்டாலும் சனத் தொகை அதிகரிப்பிற்கு ஏற்ப உணவுப் பிரச்சினை அதிகரித்துக் கொண்டு செல்கிறது. ஒரு நாளைக்கு மூன்று வேளை சாப்பிட வேண்டிய நிலையிலிருந்து மனிதன் ஒரு நாளைக்கு இரண்டு,சில நேரங்களில் ஒரு நேரம் மாத்திரம் சாப்பிடும் நிலையில் உள்ளான்.

வறுமை உட்பட இதர பிரச்சினைகளால் உணவு உட்கொள்ளும் முறையில் மாற்றங்கள் நிலவுகின்ற போது அவனது உடலியல் தொழிற்பாட்டிலும் மாற்றம் ஏற்படுகிறது.இதனால் குறித்த நபரோ அல்லது அவருக்கு பிறக்கின்ற குழந்தையோ போஷாக்கற்றவராக அல்லது ஊனமுற்றவர்களாக பிறப்பதற்கு வாய்ப்புள்ளது.

இதேவேளை நாட்டிலுள்ள பெருமளவான விவசாய நிலங்களில் குடியிருப்புகள் அமைக்கப்படுவதால் விவசாயத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்படுவதுடன் விவசாய நிலங்களின் பரப்பு குறைந்து செல்கின்றது. இவ்வாறு குறைவதன் மூலம் மக்களின் தொகைக்கு ஏற்ப உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றது. இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை அதிகரிப்பில் அதனை கொள்வனவு செய்வோரின் எண்ணிக்கை குறைவாகவுள்ளது.சாதாரண ஒரு கூலி த்தொழிலாளியொருவரினால் கொள்வனவு செய்ய முடியாதளவுக்கு பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. இவ்வாறு பாரிய சிக்கலுக்குள் வாழுகின்ற ஒருவர் தனது வயிற்றுப் பசியை போக்க விலை குறைந்த உணவுப் பண்டங்களை கொள்வனவு செய்வார். விலை குறைந்த உணவுப் பண்டங்கள் தரமற்றதாகவும் சுகாதாரமற்றதாகவும் காணப்படும். அவ்வாறுள்ளதை உட்கொள்ளுமிடத்து தமது வயதை விட உடற்பருமன் கூடியோ அல்லது குறைந்த நிலையிலோ அல்லது நோயுள்ளவர்களாகவோ மாறிவிடுவர்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் விற்பனை செய்யப்படுகின்ற மருந்தூட்டப்பட்ட பழவகைகளினால் அங்குள்ள மக்களின் சுகாதாரத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் கூறினார்.

மாகாண போஷாக்கு நிலைமை தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்; கிழக்கு மாகாணத்தின் சுகாதாரத்துறைக்கு அதன் வளர்ச்சிக்கு பல பாராட்டுகள் கிடைத்துள்ளன. எனினும் வியாபாரிகள் தமது வியாபாரத்தில் வேறு வகையான செயற்றிட்டங்களை முன்னெடுப்பதால் மக்கள் நோயாளிகளாக மாறியுள்ள நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதன் ஒரு நிகழ்வாகவே கிழக்கில் அதிகளவான வியாபார நிலையங்களில் விற்கப்படுகின்ற பொருட்களுக்கு கூடியளவு இரசாயனக் கலவைகள், மருந்துப் பொருட்கள் உபயோகித்து விற்கின்றனர். தற்போது இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

அத்தோடு இம்மாகாணத்தில் உள்ள குழந்தைகளின் போஷாக்கு விடயத்தில் கவனம் செலுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.காரணம் கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தத்தினால் எமது தாய்மார்கள் கர்ப்ப காலத்தில் முறையான போஷாக்குகளை உட்கொள்ளாமையினால் பிறக்கின்ற குழந்தைகளில் பெருமளவானோர் போஷாக்கற்ற நிலையிலும் எடை கூடியவர்களாகவும் வயதை விட உடற்பருமன் குறைந்தவர்களாகவும் பிறக்கின்றனர். இவ்வாறான முறைமையை மாற்றியமைத்து சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுப்பதற்கும் நல்லதொரு இளம் சமுதாயத்தை கட்டியெழுப்பவும் கிழக்கு மாகாண வைத்தியர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதால் எதிர்காலத்தில் போஷாக்கான குழந்தைகளை உருவாக்க முடியும்.

நாட்டுக்குத் தேவையான நெல் உற்பத்தியில் கிழக்கு மாகாணம் 25 சதவீதத்தை நிறைவு செய்கிறது.கடற்றொழில் விரிவாக்கப்பட்டிருக்கின்றது. சுகாதாரம் சீர்செய்யப்பட்டும் கல்வி வளர்ச்சியடைந்துமுள்ளதால் நாமும் சில மாற்றங்களை இவ் வைத்தியத் துறையினூடாக மேற்கொள்ளவுள்ளதால் எதிர்காலத்தில் மக்களின் சுகாதாரம் தொடர்பில் பல சாதனைகளை நிலைநாட்டவுள்ளோம் என்றார்.



எனவே இளம் சமுதாயத்தினர் போஷாக்கற்ற நிலையை எதிர்நோக்கும் போது எந்தவொரு நாடும் அபிவிருத்திப் பாதையில் பயணிக்க முடியாது.எனவே முறையான சுகாதார உணவுப் பழக்க முறைகளை அரசு முன்னெடுப்பதன் மூலம் இலங்கையில் தற்போது நிலவும் குறை போஷாக்கு நிலைமைக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியும்.

**எச்.ஹுஸ்னா.**

# உங்கள் குழந்தைகளுக்கு அஜீரணக் கோளாறா?



**பாடசாலை குழந்தைகள் பெரும்பாலும் அஜீரணக்கோளாறுகளால் பாதிக்கப்படுகிறார்கள். அதற்கான காரணத்தையும் நிவாரணத்தையும் இங்கே தருகிறோம்.**

## மருத்துவம்

### காலை உணவு கட்டாயம்




பாடசாலை செல்லும் நிறையக் குழந்தைகள் காலை உணவு சாப்பிடுவதைத் தவிர்க்கிறார்கள்.அல்லது அவசரமாக அவசரமாக அள்ளி விழுங்கிவிட்டு ஓட்டம் பிடிக்கிறார்கள். இந்த இரண்டுமே அஜீரணத்திற்கு வழிவகுக்கும்.

காலை உணவுதான் அந்த நாள் முழுவதும் உடல் இயக்கத்துக்குத் தேவையான சக்தியை வழங்குகிறது. மூளையும் உடலும் சிறப்பாக இயங்க உதவுகிறது. எனவே,காலை உணவைத் தவிர்க்கக்கூடாது. காலை உணவு சாப்பிடாவிட்டால் வயிற்றில் எரிச்சல் ஏற்படும்.

பாடசாலை செல்லும் குழந்தைகள் பெரும்பாலும் 6 முதல் 7 மணிக்குள்ளாக காலை உணவைச் சாப்பிட வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அந்த நேரத்தில் வயிறு பசிப்பதில்லை என்று குழந்தைகள் சாப்பிடாமல் செல்கிறார்கள். பெற்றோரும் குழந்தை சாப்பிட மறுக்கிறது என்று நினைத்து அவர்கள் சாப்பிடாமல் சென்றாலும் கண்டு கொள்வதில்லை.

உண்மையில் உடலானது குறிப்பிட்ட நேரத்துக்கு பசிக்கத் தொடங்கும். அதே போல குறிப்பிட்ட நேரத்தில் உணவு கொடுத்துப் பழக்கம் ஏற்படுத்திவிட்டால் சில நாட்களில் அதேநேரத்தில் பசிக்கத் தொடங்கிவிடும். எனவே, குழந்தைகள் காலையில் சாப்பிட மறுத்தாலும் சில நாட்களுக்குப் பழக்கம் வருவதற்காக கட்டாயமாக சாப்பிட வைத்தால் பிறகு தானாகவே காலை 7 மணிக்குள் வயிறு பசிக்கத் தொடங்கிவிடும். சாப்பிடத் தொடங்கிவிடுவார்கள்.

### நிதானமாகச் சாப்பிடுதல்



காலையில் ஏதாவது ஹோர்ன் சத்தம் கேட்டாலே பாடசாலை வான் வந்துவிட்டதோ என்று எண்ணும் குழந்தைகளும் பெற்றோரும் ஏராளம். அதனால் அவசரம் அவசரமாக சாப்பிட்டுவிட்டு வாகனத்தைப் பிடிக்க கிளம்பிவிடுகிறார்கள்.

அவசர கோலத்தில் சாப்பிடுவது அஜீரணத்திற்குக் காரணமாகிறது. உணவை நன்கு மென்று நிதானமாகச் சாப்பிடும்போதுதான் ஜீரணம் எளிதாக நடைபெறுகிறது. உணவானது உமிழ்நீருடன் சேர்க்கப்பட்டு பற்களால் அரைக்கப்படுவதுதான் ஜீரணப் பணியின் தொடக்கம். மீதி செரிமானம்தான் வயிற்றில் நடைபெறுகிறது. அப்படியிருக்கும்போது வேக வேகமாகச் சாப்பிடுவதால் எளிதில் அஜீரணம் தொற்றிக் கொள்கிறது.

### வயிற்றுப்போக்கு

அஜீரணத்தால் ஏற்படும் பாதிப்புகளில் ஒன்று வயிற்றுப்போக்கு. உணவு சாப்பிடும் பழக்கம் மற்றும் சீதோஷ்ண நிலை மாறுபாடு ஆகியவை வயிற்றுப்போக்கிற்குக் காரணமாகிறது. கோடை காலங்களில் அதிகமாக வயிற்றுப்போக்கு ஏற்படுகிறது. கோடையில் சுத்தம், சுகாதாரமற்ற பழச்சாறு,பானங்கள் பருகுவது,சுகாதாரமற்ற உணவுகளைச் சாப்பிடுவது போன்றவை வயிற்றுப்போக்கை உருவாக்குகிறது.



பால் மற்றும் பால் உணவுப் பொருட்கள் சில குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கை ஏற்படுத்தும். பாரம்பரியமாகவே சில குழந்தைகளுக்குப் பால் பிடிக்காது. அவர்கள் பசும்பால் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். அதற்குப் பதிலாக அவர்களுக்கு சோயா பால் கொடுக்கலாம். இப்படி பால் ஒத்துக்கொள்ளாத பிரச்சினையை லாக்டோஸ் இன்டாலரன்ஸ் என்று குறிப்பிடுவார்கள்.

### வயிற்றுவலி

நாம் பொதுவாக வயிற்றில் எங்கு வலித்தாலும் வயிற்றுவலி என்று சொல்கிறோம். ஆனால், வயிற்றின் ஒவ்வொரு பாகத்தில் ஏற்படும் வலிக்கும் வேறுவேறு காரணங்கள் உண்டு. அதிக பசியாலும் வயிற்று எரிச்சலாலும் தொப்புள் பகுதிக்கு மேற்புறமாக வலிக்கும். காலை உணவு சாப்பிடாவிட்டாலும் அதிக காரம் உள்ள உணவுகளைச் சாப்பிடுபவர்களுக்கும் மேற்கண்டதுபோலவே வலி ஏற்படும்.

அஜீரணக் கோளாறாலும் வயிற்று வலி ஏற்படும். பயறு,கோஸ்,பீன்ஸ் போன்ற உணவுகள் நைட்ரஜன் சத்து அதிகம் கொண்டவை. இவை அஜீரணத்தை ஏற்படுத்தும். காரம் அதிகமுள்ள உணவுகளைக் குறைத்துக்கொண்டு வாயு தொந்தரவு தரும் உணவுகளைத் தவிர்த்தால் வயிற்று வலியைத் தவிர்க்கலாம். அஜீரணத்தைத் தடுக்கலாம்.

### செலியாக் நோய்

அஜீரணத்தை உருவாக்கும் ஒரு நோய் செலியாக்.கோதுமை மற்றும் கோதுமைஉணவுகள் பால் மற்றும் பால் உணவுகளில் குளூட்டன் என்ற புரதம் இருக்கிறது. இது ஜீரண பிரச்சினையை உருவாக்கும் புரதமாகும்.இந்தப் புரதத்தால் உருவாகும் நோய் செலியாக் எனப்படுகிறது.

இதன் அறிகுறிகளாக அடிக்கடி வயிற்றுப் போக்கு ஏற்படும். மலம் கெட்டவாடை வீசும். வயிறு உப்புசம் உருவாகும். இவற்றைக் கவனிக்காமல் விட்டுவிட்டால் குழந்தைகளின் வளர்ச்சி தடைப்படும். உடல் எடை குறையும். இந்தப் பிரச்சினையைத் தவிர்க்க அந்தப் புரதம் நிறைந்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.

### தண்ணீர்



தண்ணீர் பருகுவது பலவித பிரச்சினைகளைத் தடுக்கும். போதுமான தண்ணீர் பருகாவிட்டால் ஜீரணம் பாதிக்கும். ஜீரணம் சரியாக இல்லாவிட்டால் மலச்சிக்கல் ஏற்படும். மலச்சிக்கல் அதிகரித்தால் மலத்தோடு கோடுபோல இரத்தம் வெளியேறும். இது மலத்துவாரத்தின் கீழ்ப்பகுதி கிழிவதால் ஏற்படுகிறது. இதனால் ஆனல் பிஷர் நோய் உண்டாகும்.

தண்ணீர் அதிகம் குடிக்காமல் சாப்பிடுவது,பொரித்த உணவுகளை அதிகமாகச் சாப்பிடுவதால் மலச்சிக்கல் ஏற்படுகிறது. இந்தப் பாதிப்புள்ள குழந்தைகளைத் தினமும் குறிப்பிட்ட நேரத்தில் டொய்லெட் செல்லப் பழக்க வேண்டும். பழங்கள்,நார்ச்சத்து மிக்க உணவுகளை அதிகம் சாப்பிட வைக்க வேண்டும்.

### துரித உணவுகள்



குழந்தைகளுக்குப் பசியின்மை இப்போது அதிகமாக உள்ளது. காய்ச்சல் இருக்கும் குழந்தைகளுக்கு அதிகமாகப் பசிக்காது. அதேபோல ஜங் புட் எனப்படும் உணவுகளைச் சாப்பிடும் குழந்தைகளுக்கும் அதிகம் பசிவராது. துரித உணவுகள் எளிதில் வயிற்றை நிரப்பிவிடும். எனவே, வழக்கமாகச் சாப்பிடும் நேரத்தில் சாப்பிட முடியாது. மேலும் ஜீரணத்தைச் சிதைத்துவிடும்.எனவே, அஜீரணம் ஏற்படுகிறது.

குழந்தை பசியின்மையாகவிருந்தால் பிரச்சினைக்கான காரணத்தைத் தெரிந்து சரிசெய்யப் பாருங்கள். உங்களுக்குக் காரணம் தெரியாவிட்டால் மருத்துவரை அணுகுங்கள்.

பெரும்பாலும் குழந்தைகளை அடிக்கடி ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று சாப்பிட்டு பழக்கப்படுத்தாதீர்கள். அவர்கள் அந்த உணவின் ருசிக்கு அடிமைப்பட்டுப் போய்விடுவார்கள். அதனால் வீட்டில் எவ்வளவு ருசியாக உணவு சமைத்தாலும் அதை விரும்பமாட்டார்கள். எனவே, எப்போதாவது ஹோட்டல் உணவு, எப்போதுமே வீட்டு உணவு என்று பழக்கப்படுத்துங்கள்.

### அம்மாக்கள் கவனிக்க...



குழந்தைகளுக்கு அஜீரணம் ஏற்படாமல் இருக்க அம்மாக்கள் செய்ய வேண்டியவை...

- ★ குழந்தைகளுக்கு அவசர அவசரமாக உணவு சாப்பிடுவதைத் தவிர்க்க உதவுங்கள்.
- ★ வாயு தொந்தரவு தரும் உணவுகளைக் குறைத்துக் கொடுங்கள்.
- ★ குழந்தைகளை அடிக்கடி ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று சாப்பிட்டுப் பழக்கப்படுத்தாதீர்கள்.
- ★ காரம் மிகுந்த உணவுகளை அதிகம் கொடுக்காதீர்கள்.
- ★ சுத்தம்,சுகாதாரம் இல்லாத இடங்களில் குழந்தைகளைச் சாப்பிட அனுமதிக்காதீர்கள்.
- ★ குழந்தைகளை தினமும் சரியான நேரத்திற்குச் சாப்பிட வையுங்கள்.
- ★ நிறைய சத்துக் கிடைக்கும் என்று எண்ணி அதிகமாகப் பசும்பால் கொடுப்பது தவறானது என்பதை உணருங்கள்.
- ★ நிறையத் தண்ணீர் குடிக்கப் பழக்கப்படுத்துங்கள். குழந்தைகள் தினமும் நான்கு அல்லது ஐந்து டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும்.
- ★ இரவு உணவை 9 மணிக்குள் சாப்பிட வையுங்கள். சாப்பிட்டவுடன் தூங்கிவிடாமல் கொஞ்சு தூரம் நடந்து செல்ல வைப்பது ஜீரண சக்தியை அதிகரிக்கும்.

# பிரிட்டிஷ் பிரதமரின் அதிரடி நடவடிக்கை



பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கெமரூன் புதிதாக ஒரு நடவடிக்கை எடுக்க இருக்கிறார்.அமைச்சரவையில் தன் திட்டத்துக்கு ஒப்புதல் பெற்றிருக்கிறார்.

பயங்கரவாதம், தீவிரவாதம் போன்றவை மிகப் பெரிய அளவிலான இயக்கங்களிலிருந்து செயல்படுகின்றன என்பது போலவே அவ்வளவு பெரிய அளவில் இல்லாத சுமார் அளவிலான முஸ்லிம் தன்னார்வத் தொண்டு அமைப்புகளிலிருந்தும் தொடங்குகின்றன என்பது அவரது வாதம். எனடே அவற்றை அடையாளம் கண்டு அழித்துவிடும் நடவடிக்கைகள் பிரிட்டனில் தொடங்க இருக்கின்றன.

இந்தத் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்த ஒருவர் பாரோனெஸ் சயீதா வார்ஸி என்ற கன்சர்வேடிவ் கட்சித் தலைவர்.இந்த சயீதாவின் பூர்வீகம் பாகிஸ்தான்.பின் கடுமையாக எதிர்க்காமல் வேறென்ன செய்வார்? டேவிட் கெமரூனின் இந்தப் புதிய அணுகு முறை பிரிட்டனில் சில சின்னச் சின்ன முஸ்லிம் அமைப்புகளின் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கின்றன.

இதுதொடர்பாக இன்னொரு தகவல் பிரிட்டனில் கிட்டத்தட்ட நாற்பது பல்கலைக்கழகங்களில் பயங்கரவாத தீவிரவாத விதைகள் இளைஞர்களிடையே விதைக்கப்படுவனவாக அதிகாரிகள் அடையாளம் கண்டிருக்கிறார்கள்.ஓர் ஆய்வின் படி பிரிட்டனில் அல்-கைடா தொடர்பினால் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதச் செயல்களுக்காக கைது செய்யப்பட்டவர்களில் முப்பது சதவீதம் பேர் பல்கலைக்கழகங்களில் படித்தவர்கள் என்று தெரிய வந்திருக்கிறது. பத்து சதவீதம் பேர் அந்தப் பயங்கரவாதச் செயல் நடைபெற்றபோது அல்லது குற்றஞ்சாட்டப்பட்டபோது பல்கலைக்கழகங்களில் மாணவர்களாக இருந்தவர்கள்.



மார்க்ரெட் தாட்சரை மறந்திருக்க முடியாது.பிரிட்டனின் முதல் பெண் பிரதமர் என்ற தனிப் பெருமையுடன் இரும்பு மங்கை–அயர்ன் லேடி என்று அரசியல் வட்டாரங்களில் வர்ணிக்கப்பட்டவர்.இவர் ஒருபுறம்.

அமெரிக்க அரசியல்வாதிகளில் பெண்களில் மிகவும் அழகானவர் என்பதுடன் கவர்ச்சியானவர் என்பது சாரா போலினுக்கு உள்ள பெருமை. இந்த சாராபோலின் அலாஸ்காவின் முன்னாள் ஆளுநரும் கூட இவர் இன்னொரு புறம்.

சாராவுக்கு தாட்சர் மீது அபார அபிமானம்.அவர்தான் ரோல்மொடல் எனக்கு என்று பிரகடனப்படுத்தவில்லையே தவிர கிட்டத்தட்ட அந்த அளவுக்கு மார்க்ரெட் தாட்சர் மீது ஒரு மயக்கம் உண்டு

# அழகிய அரசியல்வாதியின் மயக்கம்

சாராவுக்கு.

2012 இல் நடைபெற இருக்கும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளர் அநேகமாக சாராபோலினாகத்தான் இருப்பார் என்று நம்பப்படுகிறது.அப்படி வேட்பாளராக ஆதரவு திரட்ட அவர் சுற்றுப்பயணம் செய்யத் திட்டமிட்டிருக்கிறார்.

ஜூலை மாதம் சூடான் போகிறேன். வழியில் லண்டனுக்கும் செல்வேன். அப்போது லண்டனில் தாட்சரைச் சந்திக்க விரும்புகிறேன் என்றார்.இந்த விபரம் தெரிந்ததும் தாட்சர் முகாமிலிருந்து சாதகமான பதில் ஏதும் கிடைக்கவில்லை.

சாராபோலின் சுத்த கிறுக்கு அவரைப்போய் தாட்சர் சந்தித்தால் அவருக்குத்தான் அவமானம்.லண்டனில் வேறு வேலை ஏதாவது இருந்தால் சாரா அதைப்பார்த்துவிட்டு ஊர்போய்ச் சேரட்டும் என்கிறது தாட்சர் முகாம்.

தாட்சரைப் பற்றிய முக்கிய தகவல் ஒன்று இருக்கிறது. 'டிமென்ஷியா' என்கிற ஞாபக மறதி நோயால் பீடிக்கப்பட்டிருக்கிறார் இரும்பு மங்கை. பொதுவாக அவர் யாரையும் சந்திப்பதில்லை.அப்படியே முக்கியம் என்றால் ஒவ்வொரு நாளின் காலைப் பொழுதில்தான் பார்ப்பதா இல்லையா என்று அன்றைய சந்திப்பு பற்றி முடிவெடுக்கிறார்களாம்.

இன்ன திகதி இந்தநேரம் என்று முன்கூட்டியே அனுமதி தருவதில்லை.

# சத்தமில்லாத ரயில்




பெரிய திட்டங்கள் பொதுவாக இத்தனை ஆண்டுகளில் முடிவடையும் என்றும் அதன்பின் செயல்பாட்டுக்கு வரும் என்றும் அறிவிக்கப்படுவதுண்டு.அவை பெரும்பாலும் குறிப்பிட்ட கெடுவுக்குள் முடிவதில்லை.சில மாதங்கள் அல்லது சில வருடங்கள் கூட தாமதமாகலாம். ஆனால், சீனாவிடம் மட்டும் இந்தத் தாமதம் என்பது அறவே இல்லை என்பது அதிசம். ஆனால் உண்மை. லேட்டட்டாகப் பாருங்கள். சீனாவின் இருபெரும் நகரங்கள் பெய்ஜிங், ஷங்காய். இரண்டு நகரங்களுக்கும் இடையே அதிவேக ரயில் பாதை போட அரசு திட்டமிட்டது. வேலை முடிந்துவிட்டது.இன்னும் ஒரு மாதத்தில் ரயில் ஓட இருக்கின்றன.

எப்போது வேலை முடிந்தது? குறிப்பிட்ட திகதிக்கு ஓராண்டு முன்னதாக! தயவு செய்து மூக்கின் மேலிருந்து விரலை எடுங்கள். மீதியையும் கேட்டுவிட்டு மொத்தமாக வைத்துக் கொள்ளலாம். இந்த அதிவேக ரயில் பாதையில் ஓடப் போகும் ரயில்கள் இன்றைய அளவில் உலகில் மிகவும் பாதுகாப்பான ரயில்கள்.ரயில்கள் பெட்டிக்குள் ரயில் ஓடும் சத்தம் கேட்கும் இல்லையா? இந்த ரயில் பெட்டிக்குள் ரயில் மணிக்கு 300 கி.மீ.வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கும் போது அந்தச் சப்தத்தின் அளவு 61 டெஸிபல்லாக இருக்கும். ஒரு விமான பறக்கையில் அதற்குள் கேட்கும் ஒலியின் அளவு 81 டெஸிபல்ஸ் 120 கி.மீ. வேகத்தில் போகும் காருக்குள் 76 டெஸிபல்ஸ்.

சீன ரயில்வே பொறியியலாளர்களுக்குச் சல்யூட் அடிக்க வேண்டும் போலத் தோன்றவில்லையா?

இன்னொரு தகவல் பெய்ஜிங்-ஷங்காய் இடையே உள்ள தூரம் 1318 கி.மீ. இதுவரை இந்தத் தூரத்தைக் கடக்க பத்து மணிநேரம் பிடித்தது.இனி அதி நவீன வேக ரயிலில் போனால் 4 மணி 48 நிமிடங்கள் மட்டுமே இன்று உலகில் ஓடும் அதிவேக ரயில்களில் முதல் பரிசு இந்த சீன ரயிலுக்குத்தான்.இந்த ரயிலில் மணிக்கு 380 கி.மீ.வேகத்தைச் சர்வ சாதாரணமாகத் தொடமுடியும்!



# அக்கம் பக்கம்

# இரட்டை வாழ்க்கைத் தம்பதி

பிரபல தம்பதிகள் இருவருமே கோடீஸ்வர குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர்கள். 'மேட் பார் ஈச் அதர்' என்பதுபோல் பொருத்தமான ஜோடியாக காணப்படுகிறார்கள். அடிக்கடி பொது நிகழ்ச்சிகள், உறவினர்களின் இல்ல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்கள். எல்லா விழாக்களிலும் முதல் வரிசையில் அமர்ந்திருக்கும் இந்த தம்பதி, பலர் கண்பட எப்போதும் சிரித்து சிரித்து பேசிக் கொண்டிருப்பார்கள். எனவே கமரா வெளிச்சம் இவர்கள் மீது அடிக்கடி விழும்.

பார்ப்பவர்கள் எல்லாம் அந்த ஜோடியைப் பாராட்டுவார்கள். வாழ்த்துவார்கள். நல்ல வாழ்க்கை வாழ்கிறார்கள் என்று மெச்சுவார்கள். மகிழ்ச்சியான தம்பதி என்று புகழவும் செய்வார்கள். இதெல்லாம் அந்த ஜோடியின் வாழ்க்கையின் ஒரு புறம் தான்.

அவர்களின் மறுபுற வாழ்க்கையோ தலைகீழானது. புற வாழ்வின் புன்னகை முகத்தைப் பார்த்தவர்களுக்கு அவர்களின் அக [இல்] வாழ்க்கையை கேட்டாலே கிறுகிறுக்கும். இந்தக் கதை 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தொடங்குகிறது.

அப்போதே கணவர் பிரபலம். அவருக்கு ஒரு நண்பர் இருந்தார். திடீரென்று நண்பர் இறந்துவிடவே அவரது மனைவி தனிமரமானார். மிக நெருங்கிய நண்பர் என்பதால் அவரது மனைவியை சந்தித்து அடிக்கடி ஆறுதல் கூறிவந்தார் இவர். கணவரை இழந்த கவலையை எளிதில் மறக்கும் படியாக அதிக அக்கறை எடுத்து கவனித்து வந்தார். அவர்களுக்கிடையே இருந்த நட்பு, நாளடைவில் நெருக்கமான உறவாகி தவறுக்கு அச்சாரம் போட்டுவிட்டது.

அந்த தொடர்பிற்குப் பிறகு கணவன்–மனைவியின் குடும்ப வாழ்க்கையில் கொஞ்சம் விரிசல் விழுந்தது. தொழில் விடயமாக பக்கத்து மாகாணங்களுக்கு செல்வதாகவும் வெளிநாடு செல்வதாகவும் கிளம்பிப் போவார் கணவர். கூடவே அவளும் கிளம்பிவிடுவாள். அவர்கள் எல்லைமீறிப் போனார்கள். அடுத்தடுத்த வருடங்களில் மேலும் சில பெண்களுடனும் அவருக்குத் தொடர்பு ஏற்பட்டது.

நாளடைவில் மனைவிக்கு தெரிந்தது. கணவரின் நடவடிக்கைகளை இரகசியமாக கண்காணிக்க ஆரம்பித்தார். வெகு சீக்கிரமாகவே கணவருக்கு பல பெண்களுடன் தொடர்பு இருந்ததை கண்டுபிடித்துவிட்டார். ஆனால், அவர் ஆத்திரம் அடையவோ கணவரை தட்டிக் கேட்கவோ இல்லை. மாறாக தனக்கு பிடித்தமான இன்னொரு ஆணுடன் தொடர்பை மட்டும் ஏற்படுத்திக்கொண்டார்.

மனைவியின் தொடர்பு ஒரு நாள் கணவருக்கு தெரிந்தது. மனைவியை தட்டிக்கேட்டார். மனைவி உடனே, உங்கள் யோக்கியதை எனக்குத் தெரியுமே என்றபடி அவருக்கு பல பெண்களுடன் தொடர்பு இருப்பதற்கான ஆதாரங்களையெல்லாம் அள்ளி எடுத்து கையில் கொடுத்தார். அதிர்ந்துபோனார் கணவர்.

இனி இருவரும் சேர்ந்து வாழ முடியாது என்ற நிலை கணவன், மனைவிக்கு இடையே ஏற்பட்டது. இது அவர்களுக்கு வேண்டப்பட்ட முக்கிய பிரமுகர் ஒருவரின் காதை எட்டியது. அவர் தலையிட்டார். அனைவரும் கூடிப் பேசி ஒரு முடிவு செய்தனர்.

அந்த முடிவுதான் இது...

'இருவருக்கும் இருக்கும் வெளி உறவுகள் பற்றி இருவருமே விமர்சிக்கக்கூடாது. அது குடும்ப கௌரவத்திற்கு நல்லதல்ல. அவரவருக்குப் பிடித்தபடி வாழ்ந்து கொள்ளலாம். ஆனால் அது குடும்பத்துக்குள் எந்த பாதிப்பையும் ஏற்படுத்திவிடக் கூடாது. வெளியிலும் நமக்குள் இப்படி பிரிவினை இருக்கிறது என்பதைக் காட்டிக் கொள்ளக் கூடாது'.

அந்த முடிவுப்படிதான் கடந்த 10 ஆண்டுகளாக அந்த ஜோடி வாழ்ந்து வருகிறது. முகத்தில் போலி புன்னகையை தவழவிட்டு பொது இடங்களில் அன்னியோன்யமான தம்பதியாக நடித்து வருகிறது. இப்படிப்பட்ட 'இரட்டை வாழ்க்கை' தம்பதிகள் தற்போது அதிகரிக்கத் தொடங்கியுள்ளனர்.


## 130 வருடங்களின் பின்னர் வெளியாகும் புத்தகம்

ஷெர்லக் ஹோம்ஸ் புகழ்பெற்ற துப்பறியும் நிபுணர். பிரபலமான அந்தக் கற்பனை கதாபாத்திரத்தை உருவாக்கியவர் ஆர்தர் கானன்டொய்ல். அவர் எழுதிய தி நெரேட்டிவ்ஸ் ஒஃப் ஜான் ஸ்மித் என்ற புத்தகம் வரும் செப்டெம்பரில் வெளியாக இருக்கிறது. என்ன மகா குழப்பமாக இருக்கிறதா?

கானன்டொய்ல் இப்போது இல்லை. பின் எப்படி அவர் புத்தகம் வெளியாகும்? அவர் ஷெர்லக் ஹோம்ஸ் பாத்திரத்தை வைத்துப் பின்னிப் பிணைந்த பல கதைகள் மாபெரும் வெற்றி பெற்றன என்பது தெரியும். ஆனால் அந்தக் கதைகளுக்கெல்லாம் முன்பாக அவர் எழுதிய கதைதான் தி நெரேட்டிவ்ஸ். இப்போது தான் அது முதன் முதலாகப் புத்தகமாகிறது. எழுதப்பட்டு 130 ஆண்டுகளுக்குப்பிறகு புத்தகமாக ஒரு கதை வெளியாவது இதுவே முதன் முறை.

கானன் ஒரு மருத்துவர். கூடவே எழுத்தில் ஆர்வம். நல்ல டாக்டராக வரவேண்டும் என்று அவர் மேற்கொண்ட முயற்சிகள் பல. அதேபோல ஒரு புகழ்பெற்ற எழுத்தாளராகவும் வரவேண்டும் என்று அவர் மேற்கொண்ட முயற்சிகள் பல பல இரண்டிலும் அவர் வெற்றிகண்டார்.

ஹெர்லக் ஹோம்ஸைப் பாத்திரமாக வைத்து அவர் எழுதிய முதல் கதை ஏ ஸ்ட்டி இன் ஸ்கார்லெட் என்ற கதை. ஜோன் ஸ்மித் என்ற கேரக்டர் மூலம் இலக்கியம், அறிவியல், மதம், போர், கல்வி என்று பலதரப்பட்ட தலைப்புகளில் கானன்டொய்ல் தன் கருத்துகளைக் கதை வடிவில் வெளிப்படுத்துவதுதான் தி நெரேட்டிவ் ஒஃப் ஜான் ஸ்மித். இவரது கதைகளை ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று வரிசைப்படுத்த முடியாது. முதலில் இரண்டில் தொடங்கி கடைசியில் லேட்டஸ்ட்டாக ஒன்று என்று குறிப்பிடவேண்டும் போல இருக்கிறது.






# தமிழ் இலக்கியத்தில் நீர் மேலாண்மை

மணி. மாறன்

வான்பொழியும் நீரே உயிர்ப்பு என்பதற்கு அடிப்படையாய் அமைகிறது(குறள்-16)என்கிறார் வள்ளுவர்.அத்தகைய நீராதாரத்தை தமிழ் மக்கள் தொன்றுதொட்டு உயிரினும் மேலானதாகப் போற்றியுள்ளனர். மழைநீரைச் சேமித்து, சேமித்த நீரை திறம்படப் பயன்படுத்துவதன் மூலமே தமிழகத்தின் வேளாண்மை பெரிதும் நடைபெற்றது.இந்த மழை நீரை ஏரிகள்,குளங்களில் சேமித்து வைப்பது பற்றி இளங்கோ வடிகள் மிக அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

**'இடியுடைப் பெருமழை எய்தா ஏகப்**
**பிழையாவிளையுள் பெருவளம் சுரப்ப**
**மழை பிணித்(து) ஆண்ட மன்னவன்' (வரி.26-28)**

இப்பாடலடியில் 'மழை பிணித்து ஆண்ட மன்னவன்' என்பதன் பொருள் முறையாகப் பெய்யும் மழை நீரை ஏரி குளங்களில் சேமித்து அவற்றைத் தக்க முறையில் பயன்படுத்தி நாட்டை வளம் பெறச் செய்யும் மன்னன் இவன் என்பதாகும்.

இதே போல மழை நீரைச் சேமித்து வைப்பதற்கு ஏற்ற நீர் நிலைகளை அமைப்பது ஒரு மன்னனின் தலையாய கடமை என்பதைப் புறநானூற்றுப் பாடலில்,

**'நிலன் நெளிமருங்கின் நீர்நிலை பெருகத்**
**தட்டோரம்ம இவன் தட்டோரே**
**தள்ளாதோர் இவண் தள்ளாதோரே'**
**(புறம்-18,28-30)**

என்று புலவர் புலவியனார்,பாண்டியன் நெடுஞ்செழியனைப் பார்த்துப் பாடியுள்ளார்.இதன் பொருள் நிலம் எங்கெங்கு பள்ளமாக இருக்கிறதோ அங்கெல்லாம் நீர் நிலைகள் அமையும்படி கரை அமைத்த மன்னர்களே இவ்வுலகில் என்றென்றும் அழியாப் புகழ்பெற்று விளங்குவர் என்பதாகும்.

**'அறையும் பொறையும் மணந்த தலைய**
**எண்நாள் திங்கள் அனைய கொடுங்கரைத்**
**தெண்ணீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ' (புறம்.118)**

எனக் குறிப்பிடுவதன் மூலம் ஏரி எந்த வடிவில் இருக்க வேண்டும் என்பதைப் புறநானூறு வழி அறிய முடிகிறது. ஏரிக்கரை நீளம் குறைவாகவும் ஆனால் அதிகநீர் கொள்ளளவு கொண்டதுமான அமைப்பு எட்டாம் பிறை வடிவில் ஏரி இருக்கும்போது ஏற்படும்.இது ஏரி வடிவமைப்பில் மிகவும் சிக்கனமான வடிவமைப்பாகும்.

சிறுபஞ்ச மூலத்தில் குளம் அமைக்கும் முறை பற்றி காரியாசான் கூறியுள்ளார். அதில் பொதுக்கிணறு அமைத்தல்,வரத்துக்கால்,மதகுகள்,மிகைநீர் வெளியேறும் கலிங்கு,தூம்பு போன்றவைகளை அமைப்பவர் சொர்க்கத்துக்குப் போவார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான திரிகடுகத்தில் நீர் வரும் வரத்துக்கால் நன்கு அமையாத குளம் இருப்பின் அதனால் பயன் குறையும் என்ற செய்தியை

**'வாய்நன் கமையாக் குளனும் வயிறாரத்**
**தாய்முலை யுண்ணாக் குழவியும் சேய்மரபில்**
**கல்விமாண் பில்லாத மாந்தரும் இம்மூவர்**
**நல்குரவு சேரப்பட்டார்' (83)**

என்று தாய்ப்பால் அருந்தாத குழந்தையும்,கல்வி அற்ற நிலையில் உள்ளவர்களும் எப்படி சிறக்க முடியாதோ அது போல் வாய் நன்கு அமையாத குளமும் இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மிகுதியாக வரும் ஆற்று வெள்ளநீரை தம்முள் அடக்கிக் கொள்ளக்கூடிய பெரும் ஏரிகள் இருப்பது ஒரு நாட்டுக்குச் சிறப்புத் தரும் என்பதை 'யாறுள் அடங்குங் குளமுள வீறுசால்' என்று நான்மணிக்கடிகை குறிப்பிடுகிறது.இப்பாடலில் குறிப்பிடப்படும் ஆறு உள் அடங்கும் குளம் என்ற சொற்றொடர் நீர் மேலாண்மைத் திறத்தின் ஒரு முக்கிய வெளிப்பாடாகும்.பெரு வெள்ளம் ஏற்படும் காலங்களில் அந்நீரை உரிய முறையில் சேமித்து நீர் இல்லாத காலங்களில் பயன்படுத்தக்கூடிய நிகழ்வை இச்சொற்றொடர் எடுத்துக் காட்டுகின்றது.கண்மாய்களையும் குளங்களையும் காத்து நின்ற அதாவது முறையாகப் பராமரித்த செய்தியை அகநானூற்றுப் பாடல்,

**'பெருங்குளக் காவலன் போல**
**அருங்கடி அன்னையும் துயில் மறந்தனளே' (25)**

என்கிறது.அதாவது பனியிலும் மழையிலும் அடர்ந்த இருள் சூழ்ந்த நள்ளிரவிலும் ஏரியைக் காக்கும் காவலன்போல குழந்தையைப் பாதுகாக்க அன்னை தன் தூக்கத்தை மறந்தாள் என்பது இப்பாடலின் பொருள்.சிறு குழந்தையைத் தாயானவள் கண்ணை இமை காப்பது போல் காத்த செயலும் நீர் நிலைகளைக் காக்கும் செயலும் ஒன்றாகவே எண்ணப்பட்டு வந்துள்ளது.

'பழந்தமிழ் நூல்களில் இத்தகு நீர் நிலைகளிலிருந்து மிகு நீரை வெளியேற்ற 'கலிங்கு' என்ற அமைப்பை ஏற்படுத்தியிருந்தனர்.இக்கலிங்கு குறித்த தகவல்கள் மிகுதியாக இலக்கியங்களில் சுட்டிக்காட்டப்படுகின்றன.இத்தகு தொழில்நுட்பம் நம் தமிழகத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது.




மணிமேகலையின் பன்னிரண்டாம் காதையான 'அறவணர் தொழுத காதை' எனும் பகுதியில் புத்ததேவன் தோற்றம் பற்றிக் கூற வரும் கூலவாணிகன் சாத்தனார்,

**'பெருங்குள மருங்கில் சுருங்கைச் சிறுவழி**
**இரும்பெரு நீத்தம் புகுவது போல**
**அளவாச் சிறுசெவி அளப்பரு நல்லறம்**
**உளமலி உவகையோடு உயிர்கொளப் புகும்'**
**(1384-87)**

என்கிறார். 'சுருங்கை' என்பது பூமிக்கடியில் செல்லும் சிறிய குழாய்.அதாவது பெருங்குளங்களாகிய பேரேரிகளின் ஒரு புறம் உள்ள சிறிய சுருங்கை வழியாக அங்கு தேக்கப்பட்ட நீர் வெளியேறி மக்களுக்கு அளவிட இயலாத வகையில் பயன்தரும்.அதுபோல செவித்துளை வழியே நல்ல அறக்கருத்துகள் உள்ளத்தைச் சென்றடையும் என்பதே இதன் பொருள்.

1,600 ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தின் ஏரிகளிலும் குளங்களிலும் இருந்து நீர் வெளியேற்றும் மதகு அமைப்பு சுருங்கைகளாக இருந்தன.இந்த மதகு அமைப்பே 'குமிழித்தூம்பு' என்பதாகும்.பழந்தமிழர்களின் நீர் மேலாண்மைச் செயல்பாட்டில் இந்தக் 'குமிழித் தூம்பு' அறிவியல் சார்ந்த மிக நுட்பமான நேர்த்தியான பயன்பாடுடைய படைப்பாகும்.

இதேபோல் பெருக்கெடுத்து மிகு வேகத்தில் ஓடிவரும் நீரை குறுக்கே தடுப்பணை அமைத்துத் தடுப்பதற்கு மிகுந்த தொழில்நுட்ப அறிவு தேவைப்படும். வருகிற நீரைக் கற்கள் கொண்டு தடுப்பதால் இத்தகு தடுப்பணை 'கற்சிறை' எனும் அழகு தமிழ்ச் சொல்லால் வழங்கப்பட்டுள்ளது.தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் 'பெருகிவரும் படையை ஒரு வீரன் தடுத்து நிறுத்திப் போராடுவதுபோல் ஆற்று வெள்ளத்தைக் கற்சிறை தடுத்து நிறுத்துகிறது' (வரி:725-726)என்று கூறியுள்ளார் தொல்காப்பியர்.

தமிழ் இலக்கியங்கள் சுட்டும் நீர் மேலாண்மைச் செய்திகள் ஏதோ கற்பனையான ஒன்று என்று யாரும் எண்ணிவிட முடியாது.அதில் கூறப்படும் செய்திகள் அறிவியல் சார்ந்தவையாக இருப்பதை கல்வெட்டுச் சான்றுகள் கொண்டு உறுதி செய்ய முடிகிறது.பழைய தொழில்நுட்பங்களுடன் புதியவைகளையும் இணைத்து நீரைச் சேமித்தால் எதிர் காலத்தில் கவலைப்படும் அவசியம் இருக்காது.

# கணித மாமேதை பெற்ற மதிப்பெண்கள்



1887 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 ஆம் திகதி பிறந்தவர், ‘கணித மாமேதை’ ராமானுஜம். 32 வயதுக்குள் கணிதத்தில் பல வியத்தகு ஆய்வுகளைச் செய்த இவர் 1920 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி உயிர் நீத்தார்.

குறுகிய கால வாழ்க்கையில் இவரைப் போல ஆராய்ச்சி செய்தவர்கள் யாரும் இல்லை.கணிதத்திற்காகவே பிறந்து கணிதத்திற்காகவே வாழ்ந்தவர் இவர் என்றால் அது மிகையாகாது. பள்ளிக்கூடத்தில் படித்த போதே முதுநிலை மாணவர்களின் கணக்கு தொடர்பான சந்தேகங்களைத் தீர்த்துவைக்கும் அளவுக்கு ஆற்றல் பெற்றிருந்தார்.

ராமானுஜத்திடம் ஒளிந்து கிடந்த அபாரமான அறிவை வெளிக்கொண்டு வந்து இவர் ஒரு ‘கணித மாமேதை’ என்று உலகுக்கு அறிமுகம் செய்து வைத்தவர்,ஜி. எச்.ஹார்டி என்ற இங்கிலாந்து நாட்டு கணிதப் பேராசிரியர்.இதைச் சிலர் ‘ராமானுஜத்தைக் கண்டு பிடித்தவர் ஹார்டி’ என்று வேடிக்கையாகக் குறிப்பிடுவர். ‘முதல்தரக் கணித விஞ்ஞானி’ என்று ராமானுஜத்தைக் கூறுவார் ஹார்டி.ஒருவர் கணிதத்தில் எத்தகைய திறன் பெற்றிருக்கிறார்?என்பதை வைத்து அவருக்கு மதிப்பெண்கள் வழங்குவது ஹார்டியின் வழக்கம்.அவருடைய மதிப்பீட்டின்படி ஹார்டி தனக்குத்தானே கொடுத்துக்கொண்ட மதிப்பெண்கள் 25.லிட்டில் உட் என்பவருக்கு 30 மதிப்பெண்களும்,ஹில்பர்ட் என்பவருக்கு 80 மதிப்பெண்களும் வழங்கிய ஹார்டி,ராமானுஜத்துக்கு கொடுத்த மதிப்பெண்கள் என்ன தெரியுமா?நூற்றுக்கு நூறு.




## தெரிந்துகொள்ளுங்கள்

* சிலந்திகள் இரவில் மட்டுமே வலை பின்னுகின்றன.
* அன்னாசிப் பழத்திற்கு விதை கிடையாது.
* நமது நுரையீரலில் சுமார் 15 இலட்சம் காற்று அறைகள் உள்ளன.
* யானையின் துதிக்கையில் 40 ஆயிரம் தசைகள் உள்ளன.
* பட்டாம்பூச்சிக்கு நான்கு இறக்கைகள் உள்ளன.
* ‘ஆஸ்கார் விருது’ மொத்தம் 24 பிரிவுகளின் கீழ் வழங்கப்படுகிறது.
* யானையின் துதிக்கையில் எலும்பு கிடையாது.
* நெருப்புக்கோழி, மணிக்கு சுமார் 70 கிலோ மீற்றர் வேகத்தில் ஓடும் ஆற்றல் பெற்றது.
* அதிக கேட்கும் சக்தி கொண்ட பறவை இனம்,கிளி.
* மண்புழுக்களுக்கு கண், காது, தாடை, பல் போன்ற அமைப்புகள் கிடையாது.

## குறுக்கெழுத்துப்போட்டி - 89

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | ♣ | 11 |
| 12 | 13 | 14 | ♣ | 15 | 16 |
| 17 | ♣ | ♣ | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | ♣ |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

**இடமிருந்து வலம்**

1. ஒற்றுமை (குழம்பியுள்ளது)
7. கருமை நிறத்தவன்,திருடன் (குழம்பியுள்ளது)
12. வலிமை,சிறப்பு (குழம்பியுள்ளது)
15. வளைந்த (திரும்பியுள்ளது)
18. தந்திரம், தாமதம் செய்தல்
21. நீரற்ற மணல் வெளி
26. பகிர்ந்து கொடுத்தல் (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. அஃறிணை ஒருமை
2. ஆயுதம்,சாதனம் (குழம்பியுள்ளது)
3. மயக்கம்,விருப்பம்
4. கடையேழு வள்ளல்களில் ஒருவன்
6. காதினுள் இருக்கும் அழுக்கு (குழம்பியுள்ளது)
15. அத்தியாயம் (குழம்பியுள்ளது)
18. பிரபல பின்னணிப் பாடகி
22. உடலில் முக்கிய உறுப்பு (தலைகீழ்)
23. தழும்பு, மாம்பிஞ்சு

### குறுக்கெழுத்துப்போட்டி - 87 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. கிரேதயுகம் | 1.கிருபாகரம் |
| 7. வருடம் | 2. ரேவதி |
| 12.பாதி | 3. தட |
| 14. தபால் | 4. ஆயுதம் |
| 18. ஆவி | 6. அகம்பாவம் |
| 21. உரல் | 18. விரல் |
| 24. கலை | 22. உண |
| 26. அசாதாரணம் | 24. சாலை |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**
**எம்.பீ.முஹைதீன்,**
**இல.352, பிர்தௌஸ் வீதி,**
**பெரியநீலாவணை.**

### பாராட்டுப் பெறுவோர்

01. கே.இராஜகோபால்
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.

02. வே.ஜெயரட்ணம்
இல.36/35, கண்டி வீதி,
சுமேதகம,திருகோணமலை.

03. லதீனா ஸாஹிர்
வைத்தியர் வீதி, மாஞ்சோலைச்சேனை,
கிண்ணியா-3.

04. ஏ.எஸ்.அகஸ்ரின்
7,4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

05. எம்.ஏ.ஜெரீஸா
காலி வீதி,
தெஹிவளை.


உங்கள் விடைகளை
**Saturday மெயில்**
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு–15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

பெயர் : .............................................................

முகவரி : .............................................................

.............................................................

## ஆஜ்டெக் ஆலயம்



மெக்சிக்கோ நாட்டைச் சேர்ந்த மக்கள் ‘ஆஜ்டெக்கள்’ என்று அழைக்கப்பட்டனர். அவர்களின் பெயரிலேயே உருவாக்கபட்ட இந்த ஆலயம், கால ஓட்டத்தில் சிதைவடைந்துவிட்டது. குறிப்பிட்டுச் சொல்லும்படி தற்போது இந்த ஆலயத்தில் எதுவுமே இல்லை. ஒருசில அடையாளச் சின்னங்கள் மட்டுமே எஞ்சி இருக்கின்றன.

சூரிய பிரமிட் சூரியனின் பிறப்பிடமாகக் கருதப்படும் இந்த பிரமிட் தரையில் இருந்து 200 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கி.பி இரண்டாம் நூற்றாண்டில், இந்த பிரமிட்டுக்கு அருகிலுள்ள தியோடிகுயாகான் நகரம் மற்றும் சந்திர பிரமிட் ஆகியவற்றோடு தான் இந்த பிரமிட்டும் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது சரித்திர வல்லுநர்களின் கருத்தாகும். உலகத்திலேயே மூன்றாவது பெரிய பிரமிட் இது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த பிரமிட்டை, இயற்கையின் குகை என்றே மக்கள் நம்புகின்றனர்.

# செக்ஸ் ஜோக்குகளை விரும்புவது ஆண்களா... பெண்களா?

ஆண்களுக்கு மிக ஆனந்தம் தரும் விடயமாக இருப்பது செக்ஸ் ஜோக்குகள்.அவர்களது செல்போன் இன்பொக்ஸ்கள் அதுபோன்ற ஜோக்குகளால் நிரம்பி வழிகின்றன.பெண்கள் இதை விரும்புகிறார்களா?ஆண்கள் இதை அதிகம் விரும்புவது ஏன்?..

சிரிப்பு மனிதர்களின் சிறப்பு.சிரிப்பின் வரலாறு ஆச்சரியமானது.ஆமாம் தன்னை நெருங்கும் ஒருவரை மிரட்டுவதற்காக பற்களை விரித்துக்காட்டி பயமுறுத்திய வழக்கம்தான் பிற்காலத்தில் கடுமை குறைந்து சிரிப்பாக மலர்ந்ததாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.விலங்குகள் இன்றும் கூட அதனை நெருங்கி வரும் விலங்குகளை பற்களைக் காட்டி மிரட்டுவதை பார்க்கலாம்.



சிரிப்புத் தோன்றிய விதம் இப்படியென்றால் சிரிப்பு இன்று தோன்றும் விதம் வேறு விதமாக இருக்கிறது.கேலி செய்வதில்தான் அதிகமான நகைச்சுவைத் துணுக்குகள் வருகின்றன.அதிலும் அதிக இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டது வக்கிரமான செக்ஸ் ஜோக்குகள்.

சமீபத்திய ஆய்வு ஒன்று ஆண்கள் நகைச்சுவை செய்யும் தன்மையை மூன்று வகையாக பிரிக்கிறது.

தான் நிரம்ப விடயங்களை அறிந்தவர் என்பதை மற்றவர்களிடம் காட்டி நல்ல அந்தஸ்தைப் பெறுவதற்காக கருத்துக்கூறி சிரிப்பை வரவழைப்பது முதல் வகை.

சோகமான சம்பவங்களின் விளைவுகளைச் சமாளிப்பதற்காக நகைச்சுவை செய்தல்.

நடப்பு விடயம் அல்லது கருத்தைப் பற்றி நகைச் சுவை கோணத்தில் விபரிப்



பது.

இந்த மூன்று விடயங்களை அடிப்படையாக வைத்துதான் ஆண்களின் நகைச்சுவைகள் அமைகிறது.ஆண்களின் நகைச்சுவையை ஆராய்ந்து பார்த்தால் அவர்களின் ஒவ்வொரு ஜோக்கும் அதிர்ச்சியான ஒரு உச்ச கட்ட முடிவைக் கொண்டிருக்கும்.

ஆண்களைப் பொறுத்தவரை இடது மூளையை விடவும் வலது மூளையைத் தூண்டும் விடயங்களைக் கண்டு சிரிக்கிறார்கள்.பெண்களின் மூளை இந்த விடயத்தில் நேர்மாறானதாக இருக்கிறது.அமெரிக்காவின் ராசெஸ்டர் பல்கலைக்கழகம்,ஆண்களின் வலது கண்ணுக்கு மேலே உள்ள மூளையின் வலது முன்பகுதிதான் அவர்களின் அதிமான சிரிப்பை உணரும் பகுதியாக இருக்கிறது என்று கண்டுபிடித்துள்ளது.

பாலின வேறுபாடு,செக்ஸ் உறுப்புகள்,சோகமான நிகழ்ச்சி,பயங்கரமான சம்பவங்கள் பற்றிய ஜோக்குகள் இப்பகுதியை எளிதாக தூண்டுகின்றன.எனவே ஆண்கள் விரச நகைச்சுவையில் அதீத ஆர்வமுடையவர்களாக இருக்கிறார்கள்.அவர்களின் ஆர்வம் நீண்டகாலத்துக்கு அந்த நகைச்சுவைகளை நினைவில் வைத்திருக்கச் செய்கிறது.

தனது குழந்தைகளின் நண்பர்களின் பெயர்களை அவர்களுக்கு நினைவிருக்காது.ஆனால் அவர்கள் அதுபோன்ற குழந்தைப் பருவத்தில் கேள்விப்பட்ட செக்ஸ் நகைச்சுவையை நினைவில் வைத்திருப்பார்கள் என்றால் அவர்களின் விரச நகைச்சுவை விருப்பத்தை அளவிட்டுக் கொள்ளலாம்.

பகுத்தறிவுக்கு ஏற்றபடி படிப்படியாக அடுத்த நிலைக்குச் செல்வதும் முன்னதாக கணிக்க முடியாத முடிவைக் கொண்டதுமான நகைச்சுவைகளை ஆண்கள் பெரிதும் விரும்புகிறார்கள்.ஜோக்குகளின் மூலமாகத்தான் பெரும்பாலும் அவர்கள் கருத்து தொடர்பு கொள்கிறார்கள்.

ஒரு அபாயகரமான நிகழ்வு என்றாலும் அதன் உணர்வுகளை நகைச்சுவை மூலமே ஆண்கள் பகிர்ந்து கொள்கிறார்களாம்.இது கேலி செய்வதற்காக அல்ல.துயரத்தை அவர்களின் மனதில் அடக்கி வைத்ததன் விளைவாக நகைச்சுவை செய்வதன் மூலம் அந்த இக்கட்டான நிலைமையை சமாளிக்க முயல்வதாக ஆய்வுகள் கூறுகின்றன.ஆனால் பெண்கள் சோகங்களை கணவர்,தோழி என எல்லோரிடமும் சொல்லி ஆறுதல் அடைந்து விடுகிறார்களாம்.

'படங்களை' வரைவது,உணர்வை தூண்டும்படியாக வாசகங்களை எழுதிவைப்பது போன்ற விடயங்களை ஆண்கள் வெகு தமாஷாக செய்துவிடுகிறார்கள்.ஆண்களின் இந்த மனநிலை அவர்கள் கட்டுப்பாடின்றி வளர்ந்த விதத்தை வெளிப்படுத்துகின்றது.

ஆக மொத்தத்தில் அந்தரங்க வேளைகளில் ஒரு சில பெண்கள் மட்டும் ஆண்களின் விரச நகைச்சுவையை ரசித்தாலும் பெரும்பாலான பெண்களுக்கு விரச நகைச்சுவைகளும் பெண்களை கேலி செய்யும் நகைச்சுவைகளும் அறவே பிடிப்பதில்லையாம்.



நாகரிக உலகில் பெரும்பாலானா பெண்கள், எடுப்பாக காட்டிக்கொள்ள பயன்படுத்தும் ஹை ஹீல்ஸ் வகை செருப்புகள், பல ஆபத்துகளை வரவழைக்கும் என கண்டறியப்பட்டுள்ளது. பிரிட்டனில் ஏராளமான

## காலை வாரும் ஹை ஹீல்ஸ்

பெண்களிடம் இது தொடர்பாக ஆராய்ச்சி நடத்தப்பட்டது. 2 ஆயிரம் பெண்களிடம் கருத்துக் கேட்ட போது அதில் நான்கில் ஒரு பங்கு பேர் தினமும் ஹை ஹீல்ஸ் அணிகின்றனர் எனத் தெரிய வந்தது. ஆராய்ச்சி முடிவில் பிரிட்டனில் மட்டும் 80 லட்சம் பெண்கள் உடல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. இவ்வகை செருப்புகளை அணிவதால் உடல் அமைப்பில் மாற்றம் ஏற்படுகிறது. காலில் வலியும் உண்டாகிறது. முழங்காலுக்கும், கணுக்காலுக்கும் இடையே பாதிப்பு உருவாகிறது என்றும் ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கின்றனர்.

ஹை ஹீல்ஸ் அணியும் பெண்களுக்கு மூட்டுவலிப் பிரச்சினையும் ஏற்படுகிறது. குதிக்காலின் உயரம் அதிகமுள்ளதால் முன்னங்கால்களுக்கு அழுத்தம் அதிகரிக்கிறது பெரும்பாலான நேரங்களில் ஹை ஹீல்ஸ் அணியும் பெண்கள் சாதாரண செருப்புகளை அணிய முடியாமலும் போகிறது.

ஹை ஹீல்ஸ் அணியும் அனைத்து வயதினருக்கும் இந்தப் பிரச்சினை ஏற்படுகிறது. இதில் வயதானவர்களுக்குத் தான் அதிக பிரச்சினை என்பது உண்மையல்ல. கால்களுக்கு சரியான அளவில் செருப்பு அணிவது மிக முக்கியம். இதனால் பாதம் மற்றும் கால்களின் இணைப்புப் பகுதி பாதிக்கப்படுவதை தவிர்க்கலாம். 2-3 செ.மீ [ஒரு இன்ச்]க்கு மேல் உயரமுள்ள செருப்பை அணியக் கூடாது. உங்கள் கால்களிலும் வலி ஏற்பட்டால், ஆரம்பத்திலேயே டாக்டரிடம் சென்று சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும். ஹை ஹீல்ஸ் அணிவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். ஹை ஹீல்ஸ் அணிவதால் காலில் பேலன்ஸ் குறைகிறது. எனவே கீழே விழுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம். இதன் காரணமாக கணுக்கால் எலும்பு உடையும் ஆபத்து ஏற்படுகிறது.

இறுக்கமான ஷூ அணிவதால் கால் பெருவிரல் எலும்பு பெரிதாக வளர்ந்து விடுகிறது. இதனால் கால்விரலில் வலி உண்டாகிறது. ''ஆச்சில்ஸ்'' தசைநார்ப்பாதம் கீழ்நோக்கி போகும் போது. தசையினை எலும்போடு சேர்க்கும் ஆர்சில்ஸ் தசை நார் இருக்கிறது. ஹீல்ஸ் உயர்கிற அதேசமயம் தசை நார் இறுகுகிறது.இதனால் குதிக்காலில் வலி ஏற்படுகிறது.

ஹை ஹீல்ஸ் செப்பல் அணிவதால் முழங்காலுக்கு 26 சதவீத கூடுதல் அழுத்தம் ஏற்படுகிறது.

இடுப்பு மற்றும் முதுகெலும்பு ஆகியவற்றை முன்னோக்கி தள்ளுகிறது. அழுத்தம் ஹை ஹீல்ஸ் கால்களை நீளமானதாக காண்பிக்கிறது. ஆனால் ஹீல்ஸின் உயரம் கூடும்போது கால் பாதத்துக்கு அழுத்தம் அதிகமாகிறது.


3இஞ்ச் ஹீல்ஸ் +76 சதவீதம், 2 இஞ்ச் ஹீல்ஸ் +57 சதவீதம், 1 இஞ்ச் ஹீல்ஸ் +22 சதவீதம் நரம்புத்தளர்ச்சி ஹீல்ஸ் செப்பல் அணிவதால் காலின் 3ஆவது விரலுக்கும் 4ஆவது விரலுக்கும் இடையே உள்ள நரம்பு பாதிக்கிறது. இதனால் நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டு கால் நடுக்கம் ஏற்படுகிறது.

இறுக்கமான ஷூ அணிபவர்களுக்கு பெருவிரல் முண்டு ஏற்படுகிறது. காலின் பெருவிரலின் அடியில் உள்ள எலும்பு பாதிக்கப்பட்டு பக்கவாட்டில் வளைகிறது.



# ஸ்ரேயாவை மறுத்த கமல்






கமலின் அடுத்தபடமான விஸ்வரூபம் படத்தில் ஏற்கனவே பொலிவுட்டின் இளம் நாயகி சோனாஷி சின்ஹா ஜோடி போட்டுள்ள நிலையில் மற்றொரு பொலிவுட் நடிகையும் கமலுடன் ஜோடி போட இருக்கிறார்.கமலின் நடிப்பு மற்றும் இயக்கத்தில் விரைவில் உருவாக இருக்கும் படம் விஸ்வரூபம்.இந்த படத்தில் கமலுக்கு ஜோடியாக சத்ருகன் சின்காவின் மகளும் பொலிவுட்டின் இளம் நாயகியான சோனாஷி சின்கா நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார். இந்நிலையில் படத்தில் இன்னொரு நாயகியும் நடிக்க இருக்கிறாராம். இந்த வேடத்துக்கு முதலில் ஸ்ரேயாதான் நடிப்பதாக இருந்தது.ஆனால் கமலோ ஸ்ரேயா வேண்டாம் என்றுகூறிவிட்டாராம்.இதற்கு காரணம் ஸ்ரேயாவுக்கு கதக் நடனம் சரியாக வராததால் கமல் இந்த முடிவை எடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது. இதனிடையே ஸ்ரேயா வேடத்துக்கு பதிலாக பொலிவுட்டில் இருந்து மற்றொரு நடிகையை கமல் நடிக்க வைத்து இருக்கிறார்.அந்த நடிகை வேறு யாரும் அல்ல.பிரபல இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் சகீர்கானின் காதலி என்று கிசுகிசுக்கப்பட்டவரும்'லக் பை சான்ஸ்' உள்ளிட்ட படங்களில் நடித்தவருமான இஷா சர்வானிதான் அந்த நடிகை. இஷா சர்வானியை கமல் தேர்ந்தெடுக்க முக்கிய காரணம்,அவர் ஒரு சிறந்த டான்சரும் ஆவார்.ஆகையால் தான் இஷா சர்வானியை தன்னுடைய படத்தில் நடிக்க வைக்க முடிவெடுத்திருக்கிறார் கமல். ஆகஸ்ட் மாதம் விஸ்வரூபம் படத்தின் படப்பிடிப்பு ஆரம்ப மாக இருக்கிறது.

## Saturday சினிமா

## கோபப்படும் ஹன்சிகா



முத்தம் என்றாலே ஹன்சிகாவின் காதில் புகை வருகிறது.வேலாயுதம் படத்தில் விஜய்க்கு உதட்டோடு உதடு பதித்து முத்தம் தந்தார் என்று பத்திரிகைகள் எழுதியதிலிருந்துதான் இப்படி. வேலாயுதத்தில் ஹன்சிகாவையும் சேர்த்து இரண்டு நாயகிகள்.ஜெனிலியா ரிப்போர்ட்டராக நடித்துள்ளார். ஹன்சிகா சுறுசுறு கிராமத்துப் பெண்.இந்தப் படத்தில் விஜய்க்கும் ஹன்சிகாவுக்கும் முத்தக்காட்சி இருப்பதாக முதல் க்ளாப் அடித்தபோதே கிளப்பிவிட்டார்கள்.அது ஆலமரமாக வளர்ந்து நிற்கிறது.ரசிகர்களை ஆசை காட்டி மோசம் செய்யக் கூடாதல்லவா?ஹன்சிகாவிடமே கேட்டபோது அப்போதுதான் இந்த புகை.வேலாயுதத்தில் நான் யாருக்கும் முத்தம் தரவில்லை.தவிர முத்தக் காட்சியிலெல்லாம் நான் நடிக்க மாட்டேன் என்றார் நல்ல பிள்ளையாக.

ப்ரியாமணியிடம் அழகிருக்கிறது.தேசிய விருது வாங்குமளவுக்கு திறமையிருக்கிறது.கவர்ச்சிக்கும் குறைவில்லை. இருந்தாலும் அவரை ஏனோ கவனமாக தவிர்க்கிறது திரையுலகம்.தமிழில் ப்ரியாமணிக்கு சுத்தமாக படங்கிளில்லை.தெலுங்கில் அவ்வப்போது தூறல் மாதிரி வாய்ப்பு அமைகிறது.ஜூனியர் என்டி ஆரின் புதிய படத்தில் நடிக்க ப்ரியாமணியை கேட்டிருக்கிறார்கள்.இவர் ஏற்கனவே அவருடன் இரண்டு படங்களில் ஜோடியாக நடித்திருக்கிறார். இரண்டும் வெற்றி.ஆறா அருமையான வாய்ப்பு என்று ஓடிப்போனவருக்கு ஷாக். காரணம் புதிய படத்தில் ஸ்ருதிதான் நாயகி அப்போ ப்ரியாமணி?இரண்டாவது நாயகியாக நடிக்கின்றீர்களா என்று கேட்டிருக்கிறார்கள்.ஒன்றுமே இல்லாததுக்கு இது எவ்வளவோ மேல் என்று ப்ரியாமணி சம்மதம் தெரிவித்திருப்பதாக தெலுங்கு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



வேட்டை – ஆர்யா, அமலா போல்

தி.மு.க.வின் எதிரி என்ற கிளீன் இமேஜ் இருந்தாலும் உடன்பிறப்புகளின் ஆதரவு அரசியலில் இறங்கும் போது இருக்க வேண்டும் என்று நினைக்கிறார் போலிருக்கிறது விஜய்.பிறகென்ன வரவிருக்கிற வேலாயுதத்தில் உடன் பிறப்பையும் ஒருவரிசேர்த்திருக்கிறார்.காவலன் படத்தில் எப்படி அரசியல் துளிகூட இல்லையோ அதற்கு அப்படியே உல்டாவாக வேலாயுதத்தில் அரசியல் நெடியும் வெடியும் அதிகம்.அதிலும் சொன்னால் புரியாது சொல்லுக்குள் அடங்காது பாடல் வரிகளில் அரசியல் களைகட்டுகிறது.விஜய் அன்டனி இசையமைத்திருக்கும் இந்தப் பாடலில் ரத்தத்தின் ரத்தமே என் இனிய உடன்பிறப்பே என்று அ.தி.மு.க.,தி.மு.க.என இரண்டு தொண்டர்களுக்குமே தூண்டில் போடுகிறார் விஜய்.தி.மு.க.தொண்டனை பகைத்து கலெக்சனில் கல் எறிவானேன் என்றும் விஜய் நினைத்திருக்கலாம்.வேலாயுதம் விஜய்யின் அரசியல் வாழ்க்கைக்கு பிள்ளையார் சுழி என்றே சொல்லலாம்.





# நடிகைகள் வாங்கும் சம்பளம்



வருடத்துக்கொரு முறை நடிகர், நடிகைகளின் சம்பளப் பட்டியல் என்று குத்துமதிப்பாக ஒரு விபரம் வெளியாவதுண்டு.இதற்கு ஆதாரம் என்ன யார் இந்த தகவல்களைத் தந்தார்கள் என்றெல்லாம் கேட்டுவிடக்கூடாது. கறுப்பு வெள்ளை என கலர்கலராக நடிகர் நடிகைகள் வாங்கும் தொகைகளின் விபரங்களை அரசல் புரசலாகக் கேள்விப்பட்ட வரையில் தொகுத்துத் தருகின்றோம்.இன்றைய திகதிக்கு நம்பர் வன் நடிகை என்றால் அனுஷ்காதான்.அம்மணி வாங்கும் சம்பளம் ரூ 1.5 கோடியாம் தெலுங்கில்.தமிழிலும் கிட்டத்தட்ட அதே தொகை கொடுக்கத் தயாராக உள்ள தயாரிப்பாளருக்கு கால்ஷீட் தருவதில் முன்னுரிமை உண்டு.இந்த சம்பளம் தவிர்த்து அன்பளிப்புகள்,பரிசுகளும் உண்டு. அவை கணக்கில் வராதவை!இவருக்கு இணையாக சம்பளம் பெறும் இன்னொரு நடிகை கையகல இடுப்பழகி இலியானா.இவர் தமிழில் நடிக்க 1.75 கோடி வரை பேசி ஷங்கருக்காக பெரிய மனது பண்ணி 1.5 கோடிக்கு ஒப்புக் கொண்டாராம்.முன்பு திரிஷாவும் இதே சம்பளம்தான் வாங்கிக் கொண்டிருந்தார்.இப்போது மார்கெட் கொஞ்சம் டல்லடிக்கும் நிலையிலும் ரூபா 1.40 கோடி வரை வாங்கிவிடுகிறாராம்.சம்பள விடயத்தை அவரது அம்மா கறாராகப் பார்த்துக் கொள்வதால் அந்த டென்சனே திரிஷாவுக்கு இல்லையாம்.இரண்டாம் நிலையில் வரும் நடிகைகள் அசின்,ஜெனிலியா மற்றும் தமன்னா.மூவருமே ஒரு கோடி பட்டியலில் உள்ளனர்.சிறுத்தை வரும் வரையில் தமன்னாவின் மார்க்கெட் ஏக பிஸி.ஆனால் அந்தப் படத்துக்கு பின் காணாமலே போய்விட்டார் தமன்னா.ஆனாலும் அவருக்கான வாய்ப்புகள் இப்போதும் வாசல் கதவைத் தட்டிக்கொண்டுதான் உள்ளன.வரவிருக்கும் வேங்கையில் அம்மணிக்கு சம்பளம் ரூபா 1 கோடி என்கிறார்கள்.கோலிவூட்டில் அசின் பொலிவூட் சீன் காட்டியே ரூபா 1 கோடி இலக்கிலிருந்து இறங்காமல் உள்ளார் ஜெனிலியா காணாமல் போகவேண்டிய நேரத்தில் கைகொடுத்து ஒரு கோடி சம்பளமும் கொடுத்திருப்பவர் விஜய்.இதில் கொடுமை என்னவென்றால் வேலாயுதம் பட நாயகி ஹன்சிகாவுக்கு சம்பளம் 30 லட்சம்தானாம்.மூன்றாவது நிலையிலுள்ள நாயகிகளில் அமலா பால்,ஓவியா,டாப்ஸி உள்ளிட்டோர் வருகின்றனர்.இவர்களின் சம்பளம் ரூ.20 முதல் 30 இலட்சம் வரை,படத்துக்கேற்ப வாங்கிக் கொள்கிறார்கள்.

## கஞ்சா கறுப்புக்கு 3 நாயகிகள்

மன்னர் வளைகுடாவில் கஞ்சா கறுப்பு நாயகன்.நமக்கேத்த கதை.அதான் நாயகனாக நடிக்க ஒப்புக்கிட்டேன் என்று கறுப்பு பதுங்கினாலும் பக்கா ஹீரோயிசம் இருக்குது.படத்தில் சாதாரணமான ஒருவன் கோபப்பட்டால் என்னாகும் என்பதுதான் படத்தின் ஒன் லைன்.விஜய்யின் வேலாயுதம் ஒன் லைன் போலிருக்கும். மன்னார் வளைகுடாவில் கறுப்புக்கு மூன்று கதாநாயகிகள்.விஜய்க்கே ரெண்டுதானப்பா.

கஞ்சா கறுப்பு இதில் மீனவராக வருகிறார்.கடலும் கடல் சார்ந்த களமும் என்பதால் ராமேஸ்வரத்தில் பெரும்பாலான காட்சிகளை படமாக்கியிருக்கிறார்கள்.இயக்குநர் தனசேகரனிடம் மீனவர் பிரச்சினையை ஆழமாகச் சொல்ல வேண்டும் என்ற முனைப்பு இருக்கிறது.

நடிகைகள் நகைச்சுவை நடிகர்களுக்கிருக்கும் ஒரே பிரச்சினை கதாநாயகி, மூன்று பேருமே புதுமுகங்கள் என்பதால் கஞ்சா கறுப்புக்கு அப்படியொரு பிரச்சினை எழவேயில்லை.உணர்வு பூர்வமான பிரச்சினையை நகைச்சுவை கலந்து எடுப்பதாக கூறுகிறார் தனசேகரன்.



## வேங்கையை கைவிட்ட சன்



தனுஷின் அடுத்த படமான வேங்கையை முதலில் வெளியிடுவதாக இருந்த சன் பிக்சர்ஸ் இப்போது பின் வாங்கி விட்டது.எந்திரனுக்குப் பின் சன் பிக்சர்ஸ் கடைசியாக வெளியிட்ட படங்களில் வசூல் ரீதியாக எந்தப் படமும் தேறவில்லை. விருதுகளைக் குவித்த ஆடுகளம் உட்பட கடைசியாக வெளியான மாப்பிள்ளை மற்றும் எங்கேயும் காதல் இரண்டுமே தோல்வியைத் தழுவின.இந்த நிலையில் சன் பிக்சர்ஸ் தனது வெளியீடுகளை சத்தமில்லாமல் குறைத்துக் கொண்டுள்ளது. ஆரம்பத்தில் வாங்க ஒப்புக் கொண்ட பாலாவின் அவன்-இவன் படத்திலிருந்து பின் வாங்கிய சன் பிக்சர்ஸ் இப்போது தனுஷின் வேங்கை படத்திலிருந்தும் விலகிக் கொண்டது.இத்தனைக்கும் படத்தின் இசை வெளியீடு கூட சன் தொலைக்காட்சி ஸ்டுடியோவில்தான் நடந்தது.இப்போது படத்தின் தயாரிப்பாளரான பாரதி ரெட்டியே நேரடியாக களமிறங்கியுள்ளார்.திரையரங்குகளை இவரே நேரடியாக ஒப்பந்தம் செய்து வருகிறார்.ஹரி இயக்கத்தில் தனுஷ்,தமன்னா நடித்துள்ள இந்தப் படத்துக்கு தேவி ஸ்ரீபிரசாத் இசையமைத்துள்ளார்.ஜூலை 7 ஆம் திகதி இந்தப் படம் வெளியாகிறது.

# ஊழல் சுழலில் சோனியா









முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசாவில் தொடங்கி தற்போது தயாநிதி மாறனை வளைக்கும் அளவுக்கும் விஸ்வரூபம் எடுத்துள்ள 2ஜி ஊழல் விரைவில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியையும் நெருங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்கின்றனடில்லி வட்டாரங்கள்.

2ஜி ஊழல் விவகாரம் வெடித்த தொடக்க காலத்திலிருந்தே, இந்த ஊழல் காங்கிரஸ் தலைமை மற்றும் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தெரியாமல் நடந்திருக்காது என்று ஒருதரப்பு ஊடகங்கள் அடித்துக் கூறி வந்திருக்கத்தான் செய்கின்றன.ஆனால் கார்ப்பரேட் நிறுவனங்களின் கைப்பாவையாகிப்போன ஆங்கில ஊடகங்கள், 2 ஜி ஊழல் என்றாலே ஆ.ராசா மட்டும்தான் என்பது போன்ற ஒரு பிம்பத்தை திரும்பத் திரும்ப உருவாக்கியதால் ஏற்பட்ட சௌகரியத்தில், இந்த ஊழலில் தொடர்புடைய அல்லது அந்த ஊழலால் பயனடைந்த முக்கிய அரசியல் புள்ளிகளும் பெரு நிறுவனங்களின் முதலாளிகளும் வசதியாக தங்களை இந்த ஊழலிலிருந்து மறைத்துக்கொண்டனர்.

தற்போது 2 ஜி ஊழல் வழக்கு உச்ச நீதிமன்றத்தின் கண்காணிப்பின் கீழ் நடைபெற்று வந்தாலும் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் இந்த வழக்கில் இதுவரை சிக்கியுள்ள ஆ.ராசா, கனிமொழி, சாகித் பால்வா போன்றவர்களுக்கு தண்டனை வாங்கிக் கொடுத்துவிட்டு இந்த வழக்கை ஊத்திமூட காங்கிரஸ் கட்சி துடியாய் துடித்துக் கொண்டிருக்கிறது.

இந்த ஊழல் வழக்கில் இந்த அளவுக்கு விசாரணை நடைபெற்று குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதற்கு உச்ச நீதிமன்றத்தின் நேரடி தலையீடு மற்றும் கண்காணிப்புதான் காரணம்? அப்படி உச்ச நீதிமன்றம் மட்டும் தலையிடவில்லை என்றால் இந்த வழக்கிற்கும் போபர்ஸ் ஊழல் வழக்கு கதிதான் ஏற்பட்டிருக்கும்.

போபர்ஸ் ஊழல் குற்றம்சாட்டப்பட்ட சோனியா காந்தியின் உறவினர் ஒட்டாவியோ குட்ரோச்சியை, சிபிஐ-யால் நீதிமன்றத்தில் பரிந்துரைக்க வைத்து விடுவித்தது போன்றே 2ஜி வழக்கில் தொடர்புடையவர்களும் விடுவிக்கப்பட்டிருப்பார்கள். ஆனால் உச்ச நீதிமன்றம் என்ற கத்தி தலைக்கு மேல் தொங்கிக்கொண்டிருப்பதால் 2ஜி வழக்கை ஊத்தி மூடவும் முடியாமல் அதேசமயம் அதிக நாட்கள் நீடித்துவிடக்கூடாதே என்ற தவிப்பிலும் காங்கிரஸ் புழுங்கிக் கொண்டிருக்கிறது.

2ஜி வழக்கு நீடிக்க நீடிக்க அந்த சுழல் மெல்ல மெல்ல காங்கிரஸ் புள்ளிகள் மற்றும் அமைச்சர்களையும் வளைக்கத் தொடங்கிவிடும் என்ற பதைபதைப்புத்தான் அதற்குக் காரணம்.

ஏனெனில் இப்போதே 2ஜி ஊழல் வழக்கில் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்திற்கும் தொடர்பு இருப்பதாகக் குற்றச்சாட்டு எழத்தொடங்கிவிட்டது. அரசியல் தரகர் நீரா ராடியாவின் தொலைபேசி உரையாடல் 'டேப்' மூலம் 2 ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் ப.சிதம்பரத்துக்கும் தொடர்பு இருப்பதாக தெரியவந்துள்ளது.என்பதால் இதுகுறித்து விசாரிக்க வேண்டும் என்று பா.ஜனதா கூறியுள்ளது. ஆனால் அவசர அவசரமாக இந்த விவகாரம் அமுக்கப்பட்டதோடு வழக்கம்போல் ஆங்கில ஊடகங்களுக்கு இதை அடக்கியே வாசித்தனர்.



அதுமட்டுமல்லாது 2ஜி வழக்கில் கைதாகி சிறையில் உள்ள ஷாகித் பால்வா தொடர்புடைய நிறுவனம் தேசியவாத காங்கிரஸ் தலைவரும் மத்திய வேளாண்துறை அமைச்சருமான ஷரத் பவாருக்கு சொந்தமானது என்று கூறப்படும் நிலையில் அது உண்மைதானா என்று பவாரை இந்த வழக்கில் பெயரளவுக்கும் விசாரிக்கும் துணிச்சல் கூட சிபிஐ - க்கோ அல்லது அதனை ஆட்டுவிக்கும் காங்கிரஸ் கட்சிக்கோ இல்லை.

ஏனெனில் பவாரை நெருங்கினால் இந்த 2ஜி ஊழலில் மட்டுமல்லாது வேறு பல ஊழல்களினால் பயனடைந்த காங்கிரஸ் புள்ளிகள் யார் யார் என்பது குறித்து அவர் வாய் திறந்து விடுவார் என்பதும் அப்படி அவர் புகார் குண்டு வீசினால் அது நிச்சயம் டில்லி ,ஜன்பத் சாலை 10 ஆம் எண் (சோனியா) வீட்டில் விழுந்து வெடித்துவிடுமே என்ற அச்சமே காரணம் என்றும் கூறப்படுகிறது.

இது ஒருபுறமிருக்க, தனது பிணை மனுமீதான விசாரணையின் போது 2ஜி ஒதுக்கீடு தொடர்பாக தமக்கும் பிரதமருக்கும் இடையே நடைபெற்ற 18 கடித தொடர்பு ஆவணங்களை நீதிமன்றத்தில் காட்டி வாதாடப்போவதாக ஆ.ராசா கூறியதாக ஒரு செய்தி ஏற்கனவே டில்லி வட்டாரங்களில் பேசப்பட்டது.

இவ்வாறு பிணை மனுவுக்காக பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தெரியாமல் எதுவும் நடக்கவில்லை என்று கூறுபவர் நாளை இவ்வழக்கில் தமக்கு தண்டனை கிடைத்தால் 2ஜி ஊழலில் நான் மட்டும் பயனடையவில்லை. இவர்களும்தான் பயன் பெற்றார்கள் என்று அதுவரை வழக்கில் சிக்காதவர்களையும் போட்டு கொடுப்பதற்கான சாத்தியங்கள் அதிகமாகவே உள்ளன.

அப்படி போட்டுக் கொடுத்தால் ஆயிரம் அதிகாரம் இருந்தும் அரசியல் செல்வாக்கு இருந்தும் உச்ச நீதிமன்றம் கண்காணித்துக் கொண்டிருப்பதன் காரணமாக 2ஜி வழக்கில் எப்படி தி.மு.க. தலைவர் கருணாநிதி மகள் கனிமொழி சிக்கினாரோ அதேபோன்று 2ஜி சுழல் காங்கிரஸ் புள்ளிகளையும் வளைத்துவிடுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன.

ஏனெனில் 2ஜி முறைக்கேட்டில் ராசா இந்த அளவுக்கு புகுந்து விளையாடியதற்கு சோனியாவுக்கு மிக நெருக்கமானவரும் அவரது அரசியல் ஆலோசகருமான அகமது படேலிடமிருந்து கிடைத்த சமிக்ஞையே காரணம் என்றும் விவகாரம் இந்த அளவுக்கு வெடித்துவிட்டதால் வேறு வழியில்லாமல் இந்த வழக்கில் ராசாவையும் தி.மு.க.வையும் மாட்டவைத்து விட்டுதான் மட்டும் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறது காங்கிரஸ் என்ற பேச்சும் ஏற்கனவே எழுந்தது.

போதாததற்கு இந்த 2ஜி ஊழலில் கிடைத்த பணத்தில் 60 வீதம் சோனியா காந்தி குடும்பத்திற்குத்தான் சென்றது என்று ஆரம்பம் முதலே கூறி வரும் ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி அண்மையில் மேலும் ஒரு குண்டை வீசியிருந்தார். அது சோனியாவின் சகோதரி சமீபத்தில் வெளிநாட்டில் தீவு ஒன்றை விலைக்கு வாங்கியிருப்பதாகக் கூறியதுதான். சுப்பிரமணியம் சுவாமியின் மேற்கூறிய இரண்டு குற்றச்சாட்டு குறித்தும் காங்கிரஸ் கட்சி இதுவரை வாயே திறக்கவில்லை.

அத்துடன் ஊழல் மற்றும் கறுப்புப் பணத்திற்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி மத்திய அரசுக்கு நெருக்கடியைக் கொடுத்த பாபா ராம்தேவின் அறக்கட்டளைக்கு சொந்தமான சொத்துக்கள் குறித்து காங்கிரஸ் கேள்வி எழுப்ப பதிலுக்கு சோனியா காந்தி குடும்பத்திற்கு சொந்தமாகவும் அறக்கட்டளைகளின் சொத்து மற்றும் நிதி விபரங்கள் அவை எப்படி வந்தன என்பதுகுறித்து சோனியா விளக்கம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இது குறித்து சோனியா தரப்பிலிருந்து இதுவரை பதிலில்லை.

போதாததற்கு சோனியாவும் அவரது மகன் ராகுல் காந்தியும் ரகசியமாக அண்மையில் வெளிநாட்டுக்குப் பயணம் மேற்கொண்டனர். அவர்கள் ஐரோப்பா நாடு ஒன்றிற்கு சென்றிருப்பதாக கூறப்படும் நிலையில் பா.ஜனதா பேச்சாளர் நிர்மலா சீதாராமன் இது குறித்து கேள்வி எழுப்பியுள்ளார். ஊழலுக்கு எதிரான போராட்டம் நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் ஊழலை ஒழிக்கப்போவதாக வாய்கிழிய பேசும் சோனியா காந்தியும் ராகுல்காந்தியும் அது குறித்து மௌனம் சாதிப்பது ஏன்?என்று கேள்வி எழுப்பிய சீதாராமன் ராம்தேவ் விவகாரத்தில் காங்கிரஸ் இரட்டைவேடம் போடுவதாகவும் சாடியுள்ளார். இதற்கும் காங்கிரஸ் தரப்பில் பதில் இல்லாமல் போகவேதான் நடப்பதையெல்லாம் உன்னிப்பாகக்கவனித்து வந்த பா.ஜனதா தலைவர் நிதின் கட்கரி, சோனியா ஒரு ஊழல்வாதி என்ற பொருள்படும் படி நேரடியாகவே சாடினார்.

ஊழலுக்கு எதிராகப் போராடப்போவதாக சோனியா காந்தி கூறுவது தீவிரவாதத்துக்கு எதிராகப் போராடப்போவதாக பாகிஸ்தான் கூறுவது போல் உள்ளது. தீவிரவாதத்துக்கு எதிராக போராடப்போவதாக பாகிஸ்தான் கூறுவதை யாரும் நம்பமாட்டார்கள். இதேபோல் ஊழலுக்கு எதிராகப் போராட போவதாக சோனியா காந்தி சொல்வதை காங்கிரஸ்காரர்கள் கூட நம்பமாட்டார்கள்"" என்று நிதின் கட்கரி கூறியது, 2ஜி ஊழலில் காங்கிரஸ் கட்சிக்கு உள்ள தொடர்பை மனதில் வைத்துதான் என்று கூறுகிறார்கள் டில்லி அரசியல் நோக்கர்கள்.அதனால்தான் கட்கரி இவ்வாறு கூறியதும் பதற்றமடைந்துபோன காங்கிரஸ் இதற்குக் கடும் கண்டனம் தெரிவித்து அவர் மீது விழுந்து பிறாண்டியது.ஆனால் ஆட்சி அதிகாரம் தற்போது கையில் இருக்கும் தைரியத்தில் எந்த ஊழலையும் காங்கிரஸ் மறைக்கலாம் அல்லது கூட்டணிக் கட்சியை சேர்ந்தவர்களை பலிக்கடாவாக்கிவிட்டு தப்பித்துக்கொள்ளலாம். ஆனால் நாளை அரசியல் நிலைமை எப்படியும் மாறலாம். இந்திரா காந்தியையே உள்ளே தள்ளவைத்த அரசியல் மாற்றத்தை ஏற்படுத்திய தேசம்தான் இந்தியா என்பதை மறந்துவிடக்கூடாது.

**இவ்வார மெயிலில் இவர்...**



# அய் வெய்வேய்

சர்வதேச அளவில் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.அதேவேளை அம்மனித உரிமை மீறல்களை சர்வதேச அமைப்புகளும் உரிய நேரங்களில் விமர்சித்தும் கண்டித்தும் அறிக்கைகளை வெளியிடுகின்றன.

ஆனால் அவற்றின் மூலம் மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் அரசாங்கங்களுக்கோ அல்லது போராளிகளுக்கோ தனிமனிதர்களுக்கோ எதிராக காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதா என்பதனை நோக்கினால் அது கேள்விக்குறிதான்.

குறிப்பாக சீனா,மியன்மார் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் உள்ளிட்ட நாடுகளில் குறிப்பிடத்தக்களவிலான மனித உரிமை மீறல் சம்பவங்கள் நடைபெறுகின்றன.

அது மட்டுமல்லாமல் மனித உரிமை மீறல்களுக்கெதிரான குரலெழுப்பும் மனித உரிமை ஆர்வலர்கள் மீது ஒடுக்குமுறைகளை கட்டவிழ்த்து விடும் அரசாங்கங்களும் இருக்கின்றன.

இவ்வாறான மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெறும் நாடுகளில் மிக முக்கியமான நாடு சீனாவாகும்.மேற்குலக நாடுகளை முந்திக்கொண்டு பொருளாதார வளர்ச்சி கண்டு வரும் சீனாவில் இவ்வாறான துன்புறுத்தல் சம்பவங்கள் இடம்பெறுவது துர்அதிர்ஷ்டவசமானது.

மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் அரசியல் மறு சீரமைப்புக்காகவும் குரல் கொடுக்கும் பலர் சீனாவில் கைதிகளாக்கப்பட்டு சிறைக்கூண்டுக்குள் முடக்கப்பட்டுள்ளனர்.

சீன அரசின் செயற்பாடுகளை விமர்சித்தமைக்காக சிறையில் அடைக்கப்பட்டு அண்மையில் விடுதலை செய்யப்பட்டிருப்பவர்தான் சர்வதேச புகழ்பெற்ற ஓவியக் கலைஞரும் உயர்மட்ட அரசியல் விமர்சகருமான அய் வெய்வேய்.

உலகமே பிரமித்த வேலைப்பாடுகள் வர்ண விளக்குகள் என தமது முழுத்திறமையையும் வெளிக்காட்டிய சீனாவின் பேர்ட்ஸ் நெஸ்ற் ஒலிம்பிக் அரங்கத்தை வடிவமைத்த பெருமைக்குரிய கலைஞர் அய் வெய்வேய்.

ஆர்வமும் கலைத்துறைசார் படைப்புக்களும் நீண்ட தாடியையுடைய வெய்வேய் மீது சர்வதேச கவனத்தை கொண்டிருந்த நிலையில் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் சீன அரசியல் அமைப்பினை மறு சீரமைக்குமாறும் அவர் குரலெழுப்பினார்.

60 வருடமாக ஆட்சி அமைத்துவரும் அரசினை நாம் கொண்டுள்ளோம். ஆனால் அந்த அரசாங்கம் தலைவர்களை தெரிவு செய்வதற்கான உரிமையை மக்களுக்கு வழங்கவில்லை.மக்களின் உரிமைகளையும் மகிழ்ச்சியையும் தியாகம் செய்து இலாபமீட்டும் சமூகமே இது என 2010 நவம்பரில் பி.பி.சி.க்கு வழங்கிய பேட்டி ஒன்றில் வெய்வேய் கூறியிருந்தார்.

இக்கருத்துக்கள் வெளியிடப்பட்டதன் பின்னரே வெய்வேய் மீது அரசின் கவனம் திரும்பியதுடன், ஹொங்கொங்கை நோக்கி புறப்படத் தயாராகவிருந்த விமானத்தில் வைத்து 2011 ஏப்ரலில் கைது செய்யப்பட்ட வெய்வேய் மீது பொருளாதாரக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

சீனாவின் பிரபல கவிஞரும் கம்யூனிஷக் கட்சியின் உறுப்பினருமான அய் கிய்ங்கின் மற்றும் யாஓ ஜிங் தம்பதிகளின் மகனாக 1957 மே 18 இல் சீனாவின் ஷிகேஷி நகரில் பிறந்தார்.

வெய்வேய்க்கு 1 வயது பூர்த்தி அடைந்த நிலையில், (1958)பெற்றோர்கள் இருவரும் கலாசார புரட்சி காரணமாக தொழிலாளர் முகாமிற்கு அனுப்பப்பட்டனர்.அதன் பின்னர் 10 வருடங்கள் ஷிகோயில் இருந்து வந்த அவர் பெற்றோர் விடுவிக்கப்பட்ட பின் ஷிங்ஜியாங்கில் வசித்து வந்ததுடன் அங்கேயே தனது உயர்கல்வியை தொடர்ந்தார்.

பின்னர் பெய்ஜிங் திரைப்பட அக்கடமியில் பயின்ற அவர் த ஸ்ரார்ஸ் என்ற அமைப்பின் ஸ்தாபக உறுப்பினரானார்.


பின்னர் அமெரிக்காவில் ஒரு தசாப்தத்துக்கும் அதிகமான காலம் வாழ்ந்துவந்த அவர் 1994 இல் சீனா திரும்பினார்.


அமெரிக்காவிலும் சீனாவிலும் சமகால மற்றும் கருத்தோவியங்களை வரைவதில் தேர்ச்சி பெற்றவராக திகழ்ந்தார் வெய்வேய்.


இதன் பின்னர் சீனாவில் பல்வேறு ஓவியக் கண்காட்சிகளையும் மனித உரிமை குறித்த பிரசாரங்களையும் செய்து வந்த நிலையில் கடந்த ஏப்ரலில் கைது செய்யப்பட்டு அண்மையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.


மனித உரிமை ஆர்வலர்கள் மீது சீன அரசு ஒடுக்கு முறையை திணிப்பது இதுதான் முதற்தடவையல்ல என்பதை சீனா மறந்தாலும் உலகம் மறந்துவிடவில்லை.


**யோ.நிமல்ராஜ்**




ஏய்... சிப்... சிப்...



கடைக்காரன் சொன்னான் இந்த மணிக்கூடு நல்லா ஓடும்னு.
அதுதான் இப்படி செஞ்சுட்டன்...




சிரிக்க...
சிந்திக்க....!



# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



## கோப்பி அருந்தினால் மாயத்தோற்றம்?



அதிகமாகக் கோப்பி அருந்துவோருக்கு ஹாலுசினேஷன் எனப்படும் மாயத் தோற்றங்களைக் காணும் நிலையேற்படும் என்று எச்சரிக்கிறார்கள் ஆய்வாளர்கள்.


அமெரிக்காவின் லா டிரோப் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் இது தொடர்பான ஆய்வை மேற்கொண்டார்கள். அவர்கள் கூறும்போது ஒருநாளைக்கு ஐந்து அல்லது அதற்கு அதிகமான கோப்பை கோப்பி அருந்துவோருக்கு மாயத்தோற்ற பாதிப்பேற்படும் வாய்ப்பிருக்கிறது. கோப்பியிலுள்ள காபன் தான் இந்நிலையை ஏற்படுத்துகிறது என்கிறார்கள்.

ஆய்வுக் குழுவைச் சேர்ந்த சிமோன் குரோவ், கோப்பி மற்றும் காபீன் சேர்ந்த பானங்களான டீ, குளிர்பானங்கள், சக்தி பானங்கள் போன்றவற்றை அதிகமாக அருந்துவோருக்கு மாயத்தோற்றப் பாதிப்பு ஏற்படலாம் என்று எச்சரிக்கிறார்.

இது சம்பந்தமான ஆய்வில் மன அழுத்தமும் காபனும் ஏற்படுத்தும் தாக்கம் 92 பேரிடம் அவதானிக்கப்பட்டது.

கோப்பி போன்ற பானங்களை அளவோடு அருந்தினால் தொந்தரவில்லை. ஆனால், அது ஐந்து கோப்பைகளை நெருங்கினால் அல்லது தாண்டினால் எச்சரிக்கை தேவை என்று அடித்துக் கூறுகிறார் குரோவ்.

## கடல் நட்சத்திரங்கள்



கடலில் அதிகளவில் காணப்படுபவை கடல் நட்சத்திரங்கள். இதன் உடலின் மையப்பகுதி 'வட்டம்' எனப்படும். இதிலிருந்து நீளும் ஐந்து கதிர்கள் 'ஆரங்கள்' எனப்படும். இவை படிப்படியாகக் குறுகி நுனியில் கூர்மையாக விருக்கும். எல்லா ஆரங்களும் ஒரே தளத்தில் அமைந்துள்ளன. வட்டத்துடன், சேர்த்து இவை சரியான ஐங்கோண நட்சத்திரமாக உருவாகின்றன. எனவே, கடல் நட்சத்திரங்களின் உடல்கள் ஐந்து ஆர சமச்சீர் கொண்டவை.

இவை தோலில் உள்ள சுண்ணாம்புத் தகடுகளின் பகுதிகள். இத்தகடுகளே வட்டம், கதிர்கள் ஆகியவற்றின் கடினமான வெளிச் சட்டகமாகின்றன. நீர்க்குழாய் மண்டலமும் கடல் நட்சத்திரத்திலுள்ளது.

இது வடிகட்டும் தட்டிலிருந்து தொடங்குகிறது. இந்தத் தட்டில் உள்ள அதிகப்படியான துளைகளின் வழியாகக் கடல்நீர் வடிகட்டப்பட்டு நீர்க்குழாய் மண்டலத்தை நிரப்புகிறது. முதலில் சிறிய கற்கால்வாய் வழியே வந்து நீர் வளையக் கால்வாயை அடைகிறது. இந்தக் கால்வாயிலிருந்து ஆரத்துக்கு ஒன்றாக ஐந்து ஆரக்கால்வாய்கள் பிரிந்து செல்கின்றன. இந்தக் கால்வாய்கள் வழியே நீர் கால்களின் உட்புறத்தை அடைகிறது.


நீர்க்குழாய் மண்டலம் இயக்கத்துக்கு பயன்படுகிறது. காலில் நீர் அழுத்தும்போது அது நீண்டு கடலின் அடித்தரையை உறிஞ்சிப் பற்றிக் கொள்கிறது. கால்கள் சுருங்கும்போது நீர் கால்வாயில் திரும்பச் செலுத்தப்படுகிறது. கடல் நட்சத்திரத்தின் உடல் கால் பற்றியிருக்கும் இடத்துக்கு இழுக்கப்படுகிறது.

கடல் நட்சத்திரங்கள் உணவு உட்கொள்ளும் முறை வித்தியாசமானது. அவை வேட்டையாடி உண்ணும் உயிரினங்கள் மெல்லுடலிகளாகும்.

ஒரு மெல்லுடலியின் ஓட்டு மூடிகளைக் கால்களால் உறிஞ்சிப் பற்றிக்கொண்டு கடல் நட்சத்திரம் அவற்றை ஒருபுறமாக இழுக்கத் தொடங்கும். மெல்லுடலியின் மூடுதசைகள் உடனேயே சிப்பியை மூடிக் கொள்ளும். ஆனால், பின்பு களைத்துப் போகும். கடல் நட்சத்திரத்தின் பல கால்களோ, ஒன்று மாற்றி ஒன்றாக வேலை செய்வதால் அது களைப்படைவதில்லை.

முடிவில் கடல் நட்சத்திரமே மெல்லுடலியை வெல்லும். மெல்லுடலியின் ஓட்டு கள் திறந்து கொண்டதுமே கடல் நட்சத்திரம் தன் இரைப்பையை உள்வெளியாகத் திருப்பி நீட்டி மூடிகளுக்கிடையே புகுத்தும். இரைப்பையின் ஜீரண நீர், மெல்லுடலியின் உடலை அதன் சிப்பிக்குள்ளே ஜீரணிக்கும்.

கடல் நட்சத்திரத்தின் இந்த ஊட்டமுறை காரணமாக மெல்லுடலியானது ஓடுகளால் எவ்வளவுதான் உறுதியாக மூடப்பட்டிருந்தாலும் தப்ப முடியாமல் அதற்கு இரையாகி விடும். கடல் நட்சத்திரம் அதை ஓடுகளுக்குள்ளேயே ஜீரணித்து உட்கொண்டு வெற்று ஓடுகளை விட்டுச் செல்லும்.



## இதயம் இயங்காத நிலையிலும் உயிர் வாழ்ந்த அமெரிக்கர்

அமெரிக்காவைச் சேர்ந்த கிரெயிக் லெவிஸ் என்பவர் இதயம் செயற்படாத நிலையிலும் சில நாட்கள் உயிர் வாழ்ந்துள்ளார்.

டெக்ஸாஸ் மாநிலத்தைச் சேர்ந்த கிரெய்க் லெவிஸ் (55 வயது) என்பவரே நோயுற்ற நிலையில் இருதய இயக்கம் பாதிக்கப்பட்டு கோமாவை ஒத்த நிலைக்குச் சென்றார்.

இந்நிலையில் மருத்துவர்கள் முழுமையான செயற்கை இருதயத்துக்கு பதிலாக தம்மால் உருவாக்கப்பட்ட நவீன உபகரணமொன்றை கிரெய்க் லெவிஸுக்கு பொருத்தினர்.

இந்நிலையில் கிரெய்க் லெவிஸின் உடலில் எதுவித இருதயத் துடிப்பும் இல்லாத நிலையிலும் அவரால் அமர்ந்திருக்கவும் தனது குடும்பத்தினருடன் உரையாடவும் முடிந்தது.

எனினும் அவர் நோயின் பாதிப்பால் சிறுநீரகங்களும் ஈரலும் பாதிக்கப்பட்ட நிலையில் இருதயத்துக்கான உபகரணம் பொருத்தப்பட்டு 5 வாரங்களின் பின் மரணத்தைத் தழுவினார்.

கிரெய்க் லெவிஸின் மனைவியான லிண்டா கூறுகையில்; அவர் (கிரெய்க் லெவிஸ்) உயிர்வாழ விரும்பினார். நாங்களும் அவரை இழக்க விரும்பவில்லை" என்று கூறினார்.

இந்த துடிப்பற்ற செயற்கை இருதய உபகரணத்தை டெக்ஸாஸ் இருதய சத்திர சிகிச்சை நிறுவகத்தைச் சேர்ந்த மருத்துவர்களான பில்லி கோஹ்னும் ஒஹ்பட் பிரேஸியரும் உருவாக்கியுள்ளனர்.

அவர்கள் ஏற்கனவே இந்த உபகரணத்தை கன்றுக் குட்டிகளுக்கு வெற்றிகரமாக பொருத்தியுள்ளனர்.

“நிவேதா நீ ஒண்ணும் சின்னப் பெண்ணில்லை... உனக்கு சொல்லி புரிய வைக்க... இத்தனை நாளா... வர்ற ஒவ்வொரு வரனுக்கும் எதையாவது காரணம் சொல்லிட்டிருந்தே... போன வாரம் வந்த வரன் உனக்கு எல்லா விதத்திலயும் பொருத்தமா இருக்கு... இனியும் தள்ளிப்போட்டா... சொந்த பந்தங்களுக்கு என்னால பதில் சொல்ல முடியாது... உன் முடிவை இரண்டு நாளைக்குள்ள சொல்லு...’’ அப்பா கொஞ்சம் கடுப்பாகவே சொல்லிவிட்டு வெளியே கிளம்பினார்.

நிவேதாவிற்கு ‘எங்காவது கண்காணாத இடத்தில் போய் சாகலாமா...’ என்று கூட தோன்றியது. இடமாற்றத்தில் சென்ற முகேஷ் நாலு மாதமாக தினமும் அக்கறையாகத்தான் போன் பண்ணி பேசிக்கொண்டிருந்தான். திடீரென்று பதினைந்து நாட்களாக செல்லை ஓப் செய்து வைத்திருந்த அவன்... நேத்து சொன்ன வார்த்தைகளில் நிவேதாவிற்கு மயக்கமே வந்தது.



# ஒரு பொய்

**உஷா அன்பரசு**

‘‘நிவேதா நான் சொல்றதை கேட்டுட்டு என்னை என்ன வேணா திட்டிக்க... மறுத்து பேச எனக்கு அருகதை இல்லை... பத்து நாளைக்கு முன்னாடி எனக்கு கல்யாணமாயிருச்சு... அதற்கான விளக்கத்தை உன்கிட்ட சொல்ல முடியாது... தயவு செய்து நாம பழகின நாட்களை கெட்ட கனவா மறந்துட்டு... உனக்குன்னு நல்ல வாழ்க்கை அமைச்சிக்கோ... இனி என் கூட பேச கூட ‘ட்ரை’ பண்ணாதே...’’ போனை ஓப் செய்தான்... அப்படியே காதலையும்.

ஒரே அலுவலகத்தில் நட்பாய் பழகிய அவர்களின் எண்ணங்கள் ஒரே அலைவரிசையாய் இருக்க... காதலானது. பார்வைகளையும்... கனவுகளையும் பரிமாறிக்கொண்டார்கள்.

‘‘நிவே... எனக்குன்னு நிறைய பொறுப்புகள் இருக்கு... நம்ம கல்யாணத்துக்கு இரண்டு வருஷமாவது நீ காத்திருக்கணும்’’.

‘‘ம்... என்னோட முகேஷுக்காக நான் காலம் முழுக்கக்கூட காத்திருப்பேன்’’

‘‘பார்த்து... பார்த்து... இன்னும் அஞ்சு வருஷம் போனா நீ கிழவியாயிடுவே... என்னால உன்னை பார்க்கவே முடியாது...’’

‘‘அப்ப... அழகா இருக்கிறவரைதான் என் கூட பேசுவியா...?’’ கோபத்துடன் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

‘‘ஏய் நிவே... சும்மா விளையாட்டுக்கு சொன்னேன்... கோவத்துல நீ எப்படி இருக்கேன்னு பார்க்கத்தான்... உன்னை மறக்கறதுன்றது என்னால முடியாது. குடும்ப பாரம் மொத்தத்தையும் வீட்டுக்கு முதலா பொறந்து தாங்கிக்கிட்டிருக்கேன்... நிறைய பிரச்சினைகள் இருக்கு... இதுல என்னோட காதல் உன்னை பாதிச்சிடக்கூடாதேன்னு ரொம்ப நாளா யோசிச்சுதான் உன்கிட்ட சொன்னேன். நல்ல காலம் வர்ற வரை மனசுக்குள்ளேயே வாழலாம்டா... செல்லம்...!’’

‘‘ரொம்பத்தான் கொஞ்சறாப்பல இருக்கு...’’

‘‘ஆமா... அதுல என்ன தப்பு? நீ பேசறதை கேட்டுட்டே இருக்கலாம் போலிருக்குடி... குழந்தை மாதிரி உன்னோட பேச்சு... துறுதுறுன்னு உன்னோட பார்வை... உன்னை... அப்படியே... ம்... கஷ்டப்பட்டு என்னை கட்டுப்படுத்திக்கிறேண்டி...’’

முகேஷ் காதலுடன் அவளை... ‘டீ’ போட்டு பேசும்போது நிவேதா ரொம்பவே சந்தோஷப்படுவாள். இப்படி எல்லாம் பேசியவனா... நேற்று... அப்படி ஒரு இடியை தூக்கிப்போட்டான்? எப்படி அவனால் என்னை மறக்க முடிந்தது...? காதல் என்ற வார்த்தையையே நிவேதாவின் வாயிலிருந்து கேட்டால் மானம் போய்விட்டதாக நினைக்கும் அப்பா அம்மாவிற்கு தான் ஏமாந்ததை எப்படி சொல்ல முடியும்...

ரஞ்சனியிடம் மனம் விட்டு அழுதாள். ரயில் நகர்ந்து கொண்டிருக்க... பக்கத்திலிருப்பவர்கள் யாராவது பார்த்துவிடப் போகிறார்கள் என கண்ணீரை அடக்கி சோகமாய் உட்கார்ந்திருந்தாள்.

‘‘நிவேதா... மனசுக்கு ஆறுதலா இருக்கட்டும்ன்னுதான் நாம இப்ப வெளியே போறோம். முகேஷ் இப்படி பண்ணுவான்னு நானும்தான் எதிர்பார்க்கலை... என்ன பண்றது... எல்லோரோட இன்னொரு முகமும்... ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில்தானே வெளிப்படுது... உங்கம்மா... உனக்கு அட்வைஸ் பண்ணச் சொல்லி என் கிட்ட போன்ல சொல்லி வருத்தப்பட்டாங்க... மாப்பிள்ளை விஷயமா உன் கிட்ட நல்ல பதிலாவரணும்னு...××

::உலகமே முகேஷ்னு நினைச்சேண்டி... எப்படி என் மனசை மாத்திக்க முடியும்...?’’

‘‘மாத்திதான் ஆகணும்... காதலோட வாழ்க்கை முடிஞ்சிடறதில்லை. நிவேதா... அவன் தான் நல்லவன் இல்லைன்னு தெரிஞ்சு போயிருச்சே... அந்த அயோக்கியனை... நம்ப வைச்சி ஏமாத்தினவனை மனசுல இருந்து தூக்கிப்போடு...’’

‘‘ஏய் அங்க பாரு... அந்த குருட்டு பிச்சைக்காரனை! அவன் நீட்டற தட்டுல காசு விழுதோ இல்லையோ... அவன் பாடற பாட்டை பாரு... ’ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது’ன்று... எவ்வளவு நம்பிக்கையா பாடறான்? உலகத்துலே எவ்வளவோ கஷ்டமிருக்கு... அதுக்காக யாரும் தற்கொலை பண்ணிக்கறதில்லை... ரெண்டு ரூபா... மூணு ரூபாக்காக வெயில்ல உட்கார்ந்து செருப்பு தைச்சிட்டிருக்கிற அந்த பெரியவரை பாருடி... வாழ்க்கையை போராடி வாழ்ந்து பார்க்கணும்... நீ நல்ல சம்பாதிக்கிறே... பண்பான அப்பா... அம்மா உனக்கு காலாகாலத்துல நல்ல வாழ்க்கை அமைச்சு தரணும்னு அவங்க நினைக்கிறது தப்பா...? மனசிலிருக்கிற பொய்யானவனை தூர தூக்கி போட்டுட்டு உன் வீட்டில நல்ல பதிலை சொல்லு...’’

உடலும் மனசும் சோர்ந்துபோன நிவேதாவிற்கு முகேஷ் மேல் கோபமாய் வந்தது... தன்னை அழவைத்த அவனை ஏன் நினைக்க வேண்டும் என்று கண்ணீரை துடைத்தவள், வீட்டில் திருமணத்திற்கு சம்மதம் சொல்லி விட்டாள்.

‘‘நிவே... நீ வேற ஒரு வாழ்க்கைக்கு சம்மதிச்சிருப்பே... நீ நல்லா இருக்கணும்னுதான் ஒரு பொய்யை சொல்லிட்டேன்... நம்ம காதல் நிஜம்... நீ என் மனசுக்குள்ள இருக்கிறதும் நிஜம்... என்னோட மனசுக்குள்ள உன்னுடன் ஒரு வாழ்க்கையை நிழலா வாழ்ந்திட்டிருப்பேன்...’’ கண்ணீரை துடைத்த முகேஷ், எழ முயற்சிக்க... அவன் தங்கை உமா... ‘‘மெல்ல அண்ணா...’’ தாங்கிப் பிடித்தாள்.

பத்து நாட்களுக்கு முன் ஒரு கார் விபத்தில் முகேஷ் ஒரு காலை இழந்திருந்தான்.

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
Saturday மெயில் சிறுகதை
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

## மௌனமான காதல்



உதடுகளுக்கு தாழ்ப்பாளிட்டு...
வார்த்தைகளை விழுங்கிக்கொண்டு
விழிகளின் மொழி கொண்டு
மௌனமாய் நகர்கிறது
நமதான காதல் ...

புரிந்து கொள்ள முடியாத
இதயங்களின் மொழியால்
இரகசிய தூதுவிடுகிறோம் நானும் நீயும்...
அதனால் மனசுக்குள்ளேயே அடங்கிப்போகிறது...
யாருக்கும் தெரியாமல்
நமதான காதல்

யார் யாரோ வருவர்
ஆனால் நீ வர மாட்டாய்
காலடிச் சத்தங்களில் உன்னைத் தேடுவேன்
அது நீயாக இருக்கமாட்டாய்...அப்போது
மலையளவு பூத்த கனவு மேகங்களாய் கலைந்து
போகும்...
நமதான காதல்

விரல்கள் தொடாத புல்லாங்குழலில்
இராகமாகவே எனக்குள் விழுகிறாய்
உனக்கான பாடல் என்னிடமிருக்கிறது
புல்லாங்குழல் உன்னிடமிருக்கிறது...
ஆனால் வார்த்தைகளுக்கு தாழ்ப்பாளிட்டு
மௌனமாய் இரவு நீள்கிறது...
யாருக்கும் தெரியாமல்
மனசுக்குள்ளேயே அடங்கிப்போகிறது...
மௌனமான நமதான காதல்

**ஏ.எம்.அஸ்கர்**
**அட்டாளைச்சேனை 01**

## மதில் மேல் பூனை

ஒற்றுமையின்
சின்னமாய்;
ஒரு கொடியில்
பூத்த பூங்கொத்தாய்;
ஒன்றிணைந்த
மலர்ச்சரமாய்
கூடி வாழ்ந்த
குதூகலக் குடும்பம்

காலத்தின் தூதுவன்
சுனாமி பேரலையாய்
விரிசல் என்ற
கணை தொடுக்க
தந்தை;
தனயன்;
தகராறு;

குமுறிக் கக்கும்
எரிமலையாய்
'தந்தை'
சுழன்றடிக்கும்
சூறாவளியாய்
'தனயன்'

ஒட்டமுடியாத
கண்ணாடி துகளாய்;
சேர முடியா
எண்ணெயும்
தண்ணீருமாய்;
உடைந்து;
கலங்கி;
அச்சாணி கழன்ற
குடும்ப வண்டி

கயிற்றின் ஒரு
முனையில்
தந்தை;
மறு முனையில்
தனயன்;

வாழ்வளித்த புருஷன்;
பெற்று வளர்த்த
பிள்ளை;
இருவர்க்கும் நடுவே;
மதில்மேல் பூனையாய்
பரிதவிக்கும் பெண்மை
புருஷனா?
பிள்ளையா?

செய்வதறியாது
கலங்கி நிற்கும்
அன்புள்ளத்திற்கு
மனச்சுமை நீங்கி
அமைதி பெற;
இறைவா நீ!
வழி காட்டுவாய்.

**கற்பிட்டி வஹாப்**

## நீயும் ஓர் தாயே

அன்பே...
நான் பொறுமை
இழக்கின்றபோது
நீ புத்திமதி கூறுவதுவும்...

நான் நெருக்கடிக் குள்ளாகும்
போது நீ...
நேர்த்தியான வழி
காட்டுவதுவும்...

நான் உதாசீனமாக
நடக்கும் போது
நீ... உபதேசியா மாறி
உபதேசிப்பதாலும் ...
நான் சர்வாதிகாரியாக
தீர்மானம் எடுக்கையில்
நீ... முற்போக்கு
பின்னணியாக என்னை
மாற்றி விடுவதாலும்

நீ.. எனக்கு வாய்த்த
தாரம் அல்ல...
இன்னுமோர் தாய்
என்பதை உணர்ந்துதடி

**பரகடுவ**
**கே.எம்.சம்ஸ்**




### சிறுபான்மையினம்

ஒரு நேரம்
வலையில் அகப்பட்ட
மீன்களாய்
இன்னொரு நேரம்
வலைக்கண்ணை அறுத்த
மீன்களாய்

### சந்தர்ப்ப வாதம்

பூக்களைப் பறிக்கும்
போது செடி பாவம்
என்றவன் பின்னொரு
காலத்தில் பூக்கடை
வைத்திருந்தான்

### அந்தஸ்து

அவளது இதயத்தை
கேட்டான்
பொருந்தாது என்றவள்
தன்னிதயம் பெரிது
என்றாள்

### சுயநலம்

எறும்பு பாவம் என்ற
போது உணவு தூவியவன்
எறும்பு கடித்த போது
மலத்தியோன் பவுடரை
நினைத்தான்

**ஆ.முல்லைதிவ்யன்**

## கடவுளிடம் ஓர் வேண்டுகோள்

என் வீட்டுத் திருட்டுச் சம்பவம்
தொடர்பாக முறையிட
என் குல தெய்வ
கோயிலுக்குச் சென்றேன்
என்ன ஆச்சரியம்...!
எழுந்தருளி விக்கிரகம் உட்பட
பல விக்கிரகங்கள்
காணாமல் போயிருந்தன
தேடிப் பார்த்ததில் திருடர்கள்
வந்து போனதற்கான
தடயங்கள் தென்பட்டன
விசாரித்துப் பார்த்ததில்
நேர்த்திக்காக போடப்பட்டிருந்த
பெறுமதி மிகு நகைகளும்
உண்டியல் காசு
ஒரு தொகையும்
பறிபோன விடயம் தெரியவந்தது.

மனிதர்களுக்கு ஒரு
ஆபத்தென்றால்
சாமியிடம் சென்று
மண்டியிடுவோம்
சாமிக்கே ஆபத்தென்றால்
யாரிடம் தான் சென்று
முறையிடுவோம்?
உனக்கே பாதுகாப்பில்லாத
எங்கள் பூர்வீக மண்ணில்
எப்படி எம்மால் மட்டும்
நிம்மதியாக வாழ முடியும்?
பதில் சொல்...?

கல்லைக் கடவுளாகப்
போற்றி வழிபடும்
எம் உள்ளத்து உணர்வுகளை
இனியாவது புரிந்து கொள்...!

காலம் காலமாகக்
கட்டிக் காத்து வந்த
கடவுள் நம்பிக்கை
வீண் போகாதிருக்க;
மனிதனுக்கு அப்பாற்பட்ட
தெய்வீக சக்தியொன்று உண்
டென்பதை
மனித குலம்
உணர்ந்து தெளிந்து கொள்ள;
படைத்தவன் என்ற வகையில்
உன்னிடம் விநயமாய்
ஓர் வேண்டுகோளை
முன் வைக்கிறோம்
திசை மாறிச் செல்லும்
நம் வாழ்வை சீர்படுத்த;
தீய நாட்டம் குறைந்து
தெய்வ பக்தி எங்கும் பெருக;
எல்லாம் வல்ல பரம்பொருளான
இறைவா!
எங்களைக் காக்க பூமிக்கு
விரைந்தோடி வா...!

**குறிஞ்சிக்கவி**
**செ.ரவிசாந்**
**வீரமனை, குப்பிளான்.**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமெனில்
Saturday மெயில்
இல. 68, எவி ஹவுஸ் வீதி,
கொழும்பு-15
என்ற முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்...

# முத்தத்தில் கலக்கும் பெண்கள்



முத்தம் என்பது உப்புத் தண்ணீர் போல குடிக்க குடிக்க தாகம் அதிகமாகும் என்று சீனாவில் ஒரு சுவாரஸ்யமான பழமொழி உண்டு. அன்பின் அடையாளமாக திகழும் முத்தம் பேசக்கூடாத ஒரு வார்த்தையாகவே முன்பு இருந்தது. இப்போது நிலைமை தலைகீழ்! பலரும் முத்தங்களை பரிமாறிக் கொள்கிறார்கள்.

முதல்முறை முத்தம் பெறும்போதோ அல்லது வழங்கும்போதோ மிக பரபரப்பாகத்தான் இருக்கும். ஆனால் அந்த பரபரப்பான கணங்கள் நம் வாழ்நாள் முழுதும் இனிதான நிகழ்வாக இருக்கும் என்பதை அனைவராலும் மறுக்க முடியாது.

முத்தம் என்பது ஒரு தனி கலை. தனிநபர்களின் மொழி. ஒருவருக்கொருவர் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்திக் கொள்வதற்கான ஒரு கருவி. இந்த கருவியை சரியாக கையாளத் தெரிந்தவர்கள் தான் காதல் வாழ்க்கையில் மன்னர்களாக முடிசூட்டிக்கொள்கின்றனர்.

முத்தம் பற்றி ஆதிமுதல் அந்தம் வரைக்கும் பலரும் ஆராய்ச்சி செய்து விட்டார்கள். இன்னமும் ஆராய்ச்சி தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. முத்தத்தினால் ஏற்படும் ரசாயன மாற்றங்கள் உடலின் பல்வேறு நோய்களை குணப்படுத்துவதாக உளவியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். முத்தம் பற்றிய சில சுவாரஸ்யமான தகவல்கள் உங்களுக்காக

**மகிழ்ச்சிக்கான அளவுகோல்**

தம்பதிகள் இடையேயான நீண்டகால உறவு பலமாக இருப்பதற்கு அவர்களுக்குள் நடைபெறும் முத்த பரிமாற்றமும் ஒரு முக்கிய காரணம். தம்பதியர் இடையே இணக்கமான உறவு இருக்க வேண்டுமானால் அவர்களும் அடிக்கடி முத்தம் கொடுத்துக்கொள்ள வேண்டும்.

தங்கள் வாழ்க்கைத்துணையுடன் முத்தத்தை பகிர்ந்து கொள்வதை வாழ்க்கையின் ஒரு அங்கமாக பெண்கள் கருதுகின்றனர். தங்களின் அன்பையும், மகிழ்ச்சியையும் முத்தத்தின் மூலமே பெண்கள் வெளிப்படுதுகின்றனர்.

**உடலுக்கு புத்துணர்ச்சி**

ஒருவரையொருவர் கட்டி அணைத்துக் கொண்டு தரும் முத்தத்தினால் உடலில் ஹார்மோன் சுரப்பது அதிகரித்து உடலுக்குத் தேவையான புத்துணர்ச்சி கிடைக்கிறது. முத்தம் பெறுபவருக்கு மட்டுமல்லாமல் தருபவருக்கும் இன்பதை அளிக்கிறது.

நீங்கள் உடல் நலத்தோடும், புத்துணர்ச்சியோடும், எதிலும் வெற்றியுடனும் வாழ விரும்பினால் தினமும் வீட்டில் இருந்து கிளம்பும்போது உங்களது வாழ்க்கைத் துணைக்கு முத்தமளித்துவிட்டு கிளம்புங்கள். அப்புறம் பாருங்கள் உங்களது நாள் இனிய நாளாக மட்டுமல்ல வெற்றிகள் கிட்டும் நாளாகவும் அமையும்.

**இளமை தோற்றம் அதிகரிக்கும்**

நீண்ட முத்தத்தினால் உங்கள் உடலில் தேவையற்ற காலோரிகள் அழிகின்றன. இதனால் உங்கள் உடலை எப்போதும் கச்சிதமாக வைத்துக் கொள்ளலாம். பிரெஞ்ச் முத்தத்தினால் உங்கள் வாய் தசைகளுக்கும், கன்னத்திற்கும் எளிதான உடற்பயிற்சி கிடைக்கிறது. இதனால் உங்கள் முகம் எப்போதும் இளமையான தோற்றத்துடன் இருக்கும்.

அன்பானவர் அளிக்கும் எதிர்பாராத முத்தத்தினால் உங்கள் இதயம் படபடக்கும். அப்போது அதிகமான ரத்தம் உடலுக்குப் பாயும். அப்போது எல்லா நரம்புகளும் வேலை செய்து உடலுக்கு புத்துணர்ச்சியை அளிக்கும்.

கண்களை மூடிக் கொண்டு மூச்சை நிறுத்தி முத்தம் கொடுப்பதன் மூலம் கண்களுக்கும், இதயத்திற்கும் நல்ல உடற்பயிற்சியாகவும் அமைகிறது. டென்ஷனையும் குறைக்கிறது. எனவே நீங்கள் டென்ஷனாக இருக்கும்போது கிடைக்கும் முத்தத்திற்கு மதிப்பு அதிகம்.

**முத்தத்தில் கலக்கும் பெண்கள்**

ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள் என்பதுபோல், முத்தம் கொடுப்பதும், பெறுவதும் நாளடைவில் ஆண்களுக்கு சலித்து போய்விடுவதாக ஒரு ஆய்வில் தெரியவந்துள்ளது. ஆனால், பெண்கள் மட்டும் அதற்கு நேர்எதிராக இருக்கிறார்கள்.

முத்தத்தை புத்துணர்வு தரும் விஷயமாக அவர்கள் கருதுவதுதான் அதற்கு காரணம். முத்தம் விஷயத்தில் ஆண்கள் கண்டுகொள்ளாமல் இருந்தாலும் முத்த இன்பத்தை அணுஅணுவாய் ரசிப்பதிலும் கொடுப்பதிலும் பெண்கள்தான் 'டாப்.

தாம்பத்ய உறவில், தன் துணையை பலவாறு முத்தமிடுவதன் மூலமே அந்த உறவில் ஒரு திருப்தியான நிறைவை பெண்கள் பெறுகின்றனராம் இப்படி பல்வேறு சுவாரஸ்யமான தகவல்களை அள்ளித் தந்து இருக்கிறது, அமெரிக்க ஆய்வு ஒன்று.

# பறக்கும் மீன்கள்




உலகின் பல்வேறு கடல் பகுதிகளில் கடல் மட்டத்தைக் காட்டிலும் பல அடி உயரத்திற்குத் துள்ளிக் குதிக்கும் பறக்கும் மீன்கள் உள்ளன. கடலின் ஆழத்தில் வேகமாகச் செல்லும் வகையில் அவற்றின் உடல் அமைப்பு உள்ளது. ஆழத்தில் அதிகவேகம் எடுக்கும் இந்த மீன்கள் கடல் நீரை துளைத்துக் கொண்டு ஏவப்பட்ட ஒரு ரொக்கெட் போல கடல் மட்டத்திற்கு மேலே சீறிக் கிளம்புகின்றன. பார்ப்பதற்கு இவை பறப்பது போல தோன்றும்.

ஆழ்கடலில் உள்ள மேக்ரல், டுனா, ஸ்வாடுபிஷ், மர்லின் உள்ளிட்ட சில பெரிய வகை மீன்கள் தங்களின் இராட்சத பசிக்கு சிறிய மீன்களை உண்டு தீர்க்கின்றன. இந்நிலையில் தங்களை உணவாகக் கொள்ள வரும் இந்த எதிரி மீன்களிடம் இருந்து தப்பவே குறிப்பிட்ட சில மீன் வகைகள் கடலுக்கு மேலே மின்னல் வேகத்தில் பாய்ந்து சென்று தப்புகின்றன. பறக்கும் மீன்களின் விருப்பமான உணவு, கடல் மட்டத்தில் மிதக்கும் ஒரு வகை நுண்ணியிர்கள் தான். இவற்றை கண்டறிந்து உண்பதற்காகவும் பறக்கும் மீன்கள் கடல் மட்டத்திற்கு மேலே பாய்கின்றன என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

சர்வதேச அளவில் 40க்கும் மேற்பட்ட பறக்கும் மீன் வகைகள் உள்ளன. இவை பறப்பதற்கு ஏற்றவாறு இறக்கை போன்ற உறுப்புகள் இயற்கையாகவே அமைந்துள்ளன. பொதுவாக மற்ற மீன்களில் காணப்படும் துடுப்புகளே இறக்கைகளாக பரிணாமம் பெற்றிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். பறக்கும் மீன்களில் சில நான்கு இறக்கைகளை பெற்றவைகளாகக் காணப்படுகின்றன. இந்த மீன்கள் மற்ற மீன்களை காட்டிலும் கடல் மட்டத்தில் இருந்து அதிக உயரத்திற்கு, அதிக தூரத்திற்கு பறக்கும் திறன் பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது.

கடலுக்கு அடியில் இருந்து நீரை துளைத்து வேகமாகக் கிளம்பும் இந்த மீன்கள் மணிக்கு 60 கி.மீ. வேகத்தில் மேல் எழும்புகின்றன. பின் சில நிமிடங்களுக்கு அதே வேகத்தில் காற்றில் பறக்கின்றன. காற்றில் பறக்கும் போது பின்புற வாலை, சுக்கானாக பயன்படுத்தி செல்ல வேண்டிய திசைக்குத் தங்களின் போக்கை மாற்றிக் கொள்கின்றன. சில மீன்கள் கடல் மட்டத்தில் இருந்து நான்கு அடி உயரத்திற்கு எழும்பி 600 அடி தூரம் வரை காற்றிலேயே பறக்கும் சக்தி கொண்டவை. நீர்ப்பரப்பில் இறங்கும் வேளையில் குறிப்பிட்ட வேகத்தில் நீருக்குள் பாய்ந்து மீண்டும் மேலே எழும் வழக்கம் சில பறக்கும் மீன்களிடம் காணப்படுகிறது.

பறக்கும் மீன்கள் மற்ற சில நீர் வாழ் இனங்களைப் போலவே வெளிச்சத்தால் ஈர்க்கப்படும் குணத்தைக் கொண்டவை. இது மீனவர்களுக்கு சாதகமாகி விடுகிறது. பறக்கும் மீன் வேட்டைக்கு இரவு நேரத்தில் செல்லும் மீனவர்கள் அதிக ஒளி உமிழும் விளக்குகளைக் கடல் பரப்பில் பயன்படுத்துகின்றனர். இந்த வெளிச்சத்தால் கவரப்படும் பறக்கும் மீன்கள் ஒட்டு மொத்தமாக ஒரே இடத்திற்கு வந்து குவிகின்றன. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஏராளமான பறக்கும் மீன்களைப் பிடித்து விடுகின்றனர்!




# விம்பிள்டனுக்கு 125 வயது

உலகளவில் டென்னிஸ் போட்டிகளில் முதன்மையானது என்றும் மிகவும் பெருமை வாய்ந்ததாகவும் கருதப்படும் வருடாந்த விம்பிள்டன் டெனிஸ்போட்டிகள்தொடங்கி 125 ஆண்டுகள் ஆகின்றன.

125 ஆவது வருட போட்டிகள் லண்டனின் விம்பிள்டன் பகுதியிலுள்ள அகில இங்கிலாந்து லான் டெனிஸ் மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை தொடங்கியது.உலகளவில் பல மாறுதல்கள் டெனிஸ் விளையாட்டில் ஏற்பட்டு வருகின்ற நிலையில் விம்பிள்டன் இன்னமும் தனது மரபுகளை பாதுகாத்து வருகிறது.

டெனிஸ் விளையாட்டின் அதிகாரபூர்வமற்ற உலகப் போட்டிகள் என்றே விம்பிள்டன் டெனிஸ் போட்டிகள் கருதப்பட்டு வருவதாக இந்தியாவின் முன்னாள் டெனிஸ் வீரரான ராமநாதன் கிருஷ்ணன் கூறுகிறார்.

இவர் 1960 மற்றும் 61 ஆம் ஆண்டுகளில் விம்பிள்டன் டெனிஸ் போட்டிகளில் அரையிறுதி ஆட்டத்தில் விளையாடியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

விம்பிள்டன் டென்னிஸ் ஒரு விளையாட்டுப் போட்டிகள்மட்டுமல்லாமல் ஒரு சமூக ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியாகவும் திகழ்கின்றது என்றும் அவர் கூறுகிறார்.

போட்டிகளில் பங்குபெறும் அனைத்து 128 வீரர்களும் ஒரே மாதிரியாகத்தான் கவனிக்கப்படுவார்கள் என்றும் சுட்டிக்காட்டுகிறார் ராமநாதன் கிருஷ்ணன்.

இன்னும் ஓரிரு ஆண்டுகளில் விம்பிள்டன் டெனிஸ் போட்டிகளிலும் வண்ண உடுப்புகள் அறிமுகமாக கூடுமென்று தான் கருதுவதாகவும் அவர் கூறுகிறார்.

**பெரும் பரிசுத் தொகை**

125 வருடங்களாக விம்பிள்டன் டெனிஸ் போட்டிகள் நடைபெற்று வருகின்ற நிலையில் 1968 ஆம் ஆண்டு முதல் தான் அதில் பரிசுத்தொகை அளிக்கும் வழக்கம் நடைமுறைக்கு வந்தது.

அப்போது ஆடவர் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றவருக்கு 2000 பவுண்ஸ்களும் மகளிர் பிரிவில் வெற்றி பெற்றவர்களுக்கு 750 பவுண்ஸ்களும் பரிசாக வழங்கப்பட்டது.

2006 ஆம் ஆண்டு வரை ஆடவர் மற்றும் மகளிர் போட்டிகளில் வென்றவர்களிடையே பரிசுத்தொகையில் ஏற்றத்தாழ்வுகள் இருந்தன.இந்த வித்தியாசம் 2007 ஆம் ஆண்டு முதல் முடிவுக்கு வந்தது.அந்த ஆண்டு இருசாராருக்கும் பரிசுத்தொகையாக தலா ஏழு இலட்சம் பவுண்ஸ்கள் வழங்கப்பட்டன.

படிப்படியாக முன்னேறி இந்த ஆண்டு பரிசுத்தொகை 11 இலட்சம் பவுண்ஸாக அதிகரித்துள்ளது.திங்கட்கிழமை தொடங்கிய விம்பிள்டன் டெனிஸ் போட்டிகள் ஜூலை மாதம் 3 ஆம் திகதி ஆடவர் இறுதிப் போட்டியுடன் முடிவுக்கு வரும்.

கடந்த ஆண்டு விம்பிள்டன் போட்டிகளை சுமார் ஐந்து இலட்சம் பேர் நேரில் பார்த்தனர்.போட்டிகளின் போது 54,250 பந்துகள் பயன்படுத்தப்படுகின்றன.




கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற போட்டிகளில் மிக உயரியதான விம்பிள்டன் டெனிஸ் திருவிழாவில் 100 க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் களத்தில் குதித்தாலும் குறிப்பிட்ட வீரர், வீராங்கனைகளின் கைகளில் தான் மகுடம் தவழப் போகிறது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் தற்போதைய சாம்பியனும் 'நம்பர் வன்' வீரருமான ஸ்பெயினின் ரபெல் நடால், 6 முறை சாம்பியனான சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 2 ஆம் நிலை வீரர் செர்பியாவின் ஜோகோவிச் 4 ஆம் நிலை வீரர் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே ஆகியோரில் ஒருவருக்கு தான் பட்டம் வெல்லும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

சில ஆண்டுகளாக டெனிஸில் ஆதிக்கம் செலுத்தி வரும் இவர்களைத் தவிர வேறு யாரும் பட்டம் வென்றால் உண்மையிலேயே ஆச்சரியப்பட்டுக் கொள்ளலாம்.இறுதிப் போட்டியில் நடால்-பெடரர் அல்லது நடால்-ஜோகோவிச் ஆகியோர் சந்திக்க வாய்ப்பிருப்பதாக நிபுணர்கள் கணித்துள்ளனர்.நடால் முதல் சுற்றில் மைக்கேல் ரஸ்செலையும்(அமெரிக்கா),பெடரர் முதல் சுற்றில் மிகைல் குகுஷ்கினையும் (கஜகஸ்தான்),ஜோகோவிச் முதல் சுற்றில் ஜெரிமி சார்டியையும் (பிரான்ஸ்) தோற்கடித்தனர்.

கடந்த ஆண்டு முதல் சுற்றில் அமெரிக்காவில் ஜோன் இஸ்னர்-பிரான்சின் நிகோலஸ் மகுத் மோதிய ஆட்டம் 11 மணி 5 நிமிடம் நடந்தது.டெனிஸ் வரலாற்றில் நீண்ட நேரம் நடந்த ஆட்டம் இதுவாகும்.இம்முறை இவர்கள் இருவரும் முதல் சுற்றில் சந்தித்ததும் குறிப்பிடத்தக்கது.

**வில்லியம்ஸ் சகோதரிகள்:**

பெண்கள் பிரிவில் தற்போதைய சாம்பினான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் டெனிஸுக்கு திரும்பியுள்ளது ரசிகர்களை ஆர்வமடையச் செய்துள்ளது.காயம் மற்றும் உடல்நலக்குறைவால் ஓராண்டுக்குப் பிறகு டெனிஸிக்கு வந்திருக்கும் 29 வயதான செரீனா எந்தளவுக்கு மீண்டும் தாக்கத்தை ஏற்படுத்தப்போகிறார் என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பாகும்.அவர் முதல் சுற்றில் பிரான்சின் அரவானே ரெஸாயை தோற்கடித்தார்.

அவரது சகோதரி 31 வயதான வீனஸ் வில்லியம்சும் காயத்திலிருந்து குணமாகிவிட்டார்.

கடந்த 11 விம்பிள்டன் சாம்பியன்ஷிப் போட்டிகளில் 9 இல் சகோதரிகள் தான் பட்டத்தை வென்றிருக்கிறார்கள்.இவர்களின் வீறுநடை இந்த முறையும் தொடருமா?என்பதை பார்க்கலாம்.

**வோஸ்னியாக்கி:**

நம்பர்வன் இடத்தை வகித்தாலும் இதுவரை எந்த கிராண்ஸ்லாம் பட்டமும் வெல்லாத டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி விம்பிள்டனில் சாதிக்கும் முனைப்புடன் உள்ளார்.அவர் வில்லியம்ஸ் சகோதரிகள் பற்றி பேசும் போது;

தொடக்க சுற்றுகளில் வில்லியம்ஸ் சகோதரிகளை சந்திக்க யாரும் விரும்பமாட்டார்கள்.இவர்கள் இருவரும் அனுபவம் வாய்ந்தவர்கள்.குறிப்பாக போட்டிக்கும் நடக்கும் புற்தரையில் அவர்கள் சிறப்பாக ஆடக்கூடியவர்கள் என்றார்.வோஸ்னியாக்கி முதல் சுற்றில் ஸ்பெயினில் அரந்த்ஸா பாராவை தோற்கடித்தார்.வோஸ்னியாக்கி அரையிறுதியில் செரீனாவை சந்திக்க வேண்டி வரலாம்.

**சாதிப்பாரா ஷரபோவா:**

2004 ஆம் ஆண்டு விம்பிள்டனை தனது 17 ஆவது வயதில் ருசித்த ரஷிய புயல் மரியானா ஷரபோவா மீண்டும் இங்கு தனது முத்திரையை பதிக்க தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்.மறுபடியும் இங்கும் வென்றால் அது எனக்கு மிகப் பெரிய சாதனையாக இருக்கும் என்று ஷரபோவா தெரிவித்தார். அவர் முதல் சுற்றில் சக நாட்டவரான சக்வெடாசேவை தோற்கடித்தார்.

ஸ்வோனரிவா (ரஷியா),லீனா (சீனா), பிரான்செஸ்கா சிவோன்( இத்தாலி),மரியன் பார்டோலி (பிரான்ஸ்),சமந்தா ஸ்டோகர் (அவுஸ்திரேலியா),அஸரென்கா(பெலாரஸ்) ஆகியோரும் பட்டத்திற்கான போட்டியில் உள்ளனர்.

**300 கோடி ரூபா பரிசு**

இந்தப் போட்டிக்கான மொத்த பரிசுத்தொகை சுமார் 300 கோடி ரூபாவாகும்.இது கடந்த ஆண்டை விட 6.4 சதவீதம் அதிகமாகும்.ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவில் ஒற்றையர் பட்டம் வெல்வோருக்கு தலா 20 கோடி ரூபாவும் 2 ஆவது இடத்தைப் பிடிப்போருக்கு 10 கோடி ரூபாவும் பரிசாக வழங்கப்படும்.

இது 125 ஆவது விம்பிள்டன் சாம்பியன்ஷிப் போட்டி என்பதால் போட்டி அமைப்பாளர்கள் இதனை வெகுவிமரிசையாக நடத்த முடிவு செய்திருக்கிறார்கள்.ஆனால் மழை அவ்வப்போது மிரட்டிக் கொண்டிருப்பதால் அவர்களுக்கு லேசான கவலையை ஏற்படுத்தியுள்ளது.2 வாரம் நடக்கும் இந்த டெனிஸ் கொண்டாட்டத்தை 'ஸ்டார் ஸ்போர்ட்ஸ் சனல்' நேரடி ஒளி பரப்பு செய்கிறது.

# சாதனை முயற்சியில் சோதனை




ஸ்ரீலங்கா பிரிமியர் லீக் ருவென்ரி-20 போட்டியில் இந்திய அணி வீரர்கள் பங்கேற்பது தொடர்பிலான இழுபறி தொடர்வதுடன் இந்த விவகாரம் இலங்கை - இந்திய கிரிக்கெட் சபைகளின் உறவை பாதிக்கலாமென்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபை மிக மோசமான நிதிநெருக்கடியில் சிக்கித் தவிக்கையில் உள்நாட்டில் இந்திய ஐ.பி.எல்.ருவென்ரி-20 போட்டியை நடத்தி தனது நிதி நிலையை ஓரளவு சரிக்கட்ட மேற்கொண்ட முயற்சிக்கு இந்தியக் கிரிக்கெட் சபை முட்டுக்கட்டை போடுவது போல் இலங்கைக் கிரிக்கெட் சபை உணர்கிறது.

இந்தப் போட்டியின் மூலம் அணிகளின் அனுசரணையாளர்களிடமிருந்தும் தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமையை விற்பதன் மூலமும் பெருமளவு பணத்தைத் திரட்டலாமென இலங்கைக் கிரிக்கெட் சபை கருதியது. இதற்காக இந்திய வீரர்களின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்தது.

இலங்கை பிரிமியர் லீக் 20 ஓவர் கிரிக்கெட் போட்டி ஜூலை 19 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 4 ஆம் திகதி வரை நடக்கிறது. இந்தப் போட்டியில் கெய்ல், பொலார்ட், அப்ரிடி, வெட்டோரி, கிப்ஸ் உட்படப் பல வெளிநாட்டு வீரர்கள் கலந்துகொள்கிறார்கள்.

இந்தப் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த பிரவின்குமார், முனாப் பட்டேல், அஸ்வின், இர்பான் பதான், மனோஜ்திவாரி, தினேஷ் கார்த்திக், மனிஷ்பாண்டே, வால்தாட்டி, ரவீந்திர ஜடேஜா, சவுரவ் திவாரி, உமேஷ்யாதவ், வினய்குமார் ஆகிய 12 வீரர்கள் பங்கேற்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்காகத் தடையில்லா சான்றிதழ் கேட்டு இந்தியக் கிரிக்கெட் சபையிடம் விண்ணப்பித்திருந்தனர்.

இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு இந்தியக் கிரிக்கெட் சபை முதலில் அனுமதி வழங்கும் முடிவிலிருந்தது. இந்த நிலையில் கிரிக்கெட் சபைக் கூட்டத்தில் இலங்கை பிரிமியர் லீக் போட்டியை சிங்கப்பூரைச் சேர்ந்த தனியார் நிறுவனம் நடத்துவதால் இந்திய வீரர்களுக்கு இந்தப் போட்டியில் பங்கேற்க அனுமதியளிப்பதில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.



இது குறித்து இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷசாங் மனோகர் அளித்த பேட்டியில் கூறியதாவது;

முன் அறிவிப்பில்லாமல் நடைபெற்ற இந்தியக் கிரிக்கெட் சபைக் கூட்டத்தில் சிங்கப்பூர் தனியார் நிறுவனம் சார்பில் இலங்கை பிரிமியர் லீக் போட்டியை நடத்துவதால் இந்தப் போட்டியில் பங்கேற்க எந்தவொரு இந்தியக் கிரிக்கெட் வீரருக்கும் அனுமதியளிப்பதில்லை என்று முடிவு செய்யப்பட்டது. இந்தக் கூட்டத்தில் 18 முதல் 20 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். தனியார் அமைப்புகள் நடத்தும் போட்டிகளில் வீரர்களைப் பங்கேற்க அனுமதிப்பதில்லை என்பது இந்தியக் கிரிக்கெட் சபையின் கொள்கையாகும்.

தடையில்லா சான்றிதழ் மறுப்பு; இந்தப் போட்டியில் பங்கேற்க இந்திய வீரர்களுக்குத் தடையில்லா சான்றிதழ் வழங்குவதில்லை என்று முடிவெடுத்திருக்கிறோம். இது குறித்து இலங்கைக் கிரிக்கெட் சபையிடம் நாங்கள் ஏற்கனவே விரிவாகத் தெரிவித்து விட்டோம்.



முதலில் இந்திய வீரர்களுக்கு அனுமதி வழங்குவதென்று முடிவு செய்திருந்தோம். ஆனால், வீரர்கள் ஒப்பந்தம் உட்பட அனைத்து உரிமங்களும் தனியார் அமைப்புக்குச் சொந்தம் என்பதை உணர்ந்த பின்னர் எங்கள் முடிவை மாற்றியிருக்கிறோம்.

இலங்கை பிரிமியர் லீக்கில் இந்திய வீரர்கள் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டிருப்பதால் இந்திய கிரிக்கெட் சபையின் சார்பில் நடத்தப்படும் ஐ.பி.எல்.20 ஓவர் போட்டியில் இலங்கை வீரர்கள் கலந்துகொள்ள அந்த நாட்டுக் கிரிக்கெட் சபை தடை விதிக்கலாமென்று நினைக்கவில்லையென்று கூறினார்.

இதற்கிடையில் இலங்கைக் கிரிக்கெட் சபைச் செயலாளர் நிஷாந்தா ரணதுங்க அளித்த பேட்டியில், 'இலங்கை பிரிமியர் லீக் போட்டியை இலங்கைக் கிரிக்கெட் சபை தான் நடத்துகிறது. இந்தப் போட்டிக்கான வணிக உரிமை மட்டும்தான் சோமர்செட் என்ற நிறுவனத்துக்கு அளிக்கப்பட்டுள்ளது' என்று விளக்கமளித்துள்ளார்.

இதேநேரம் இந்திய வீரர்களுக்குத் தடை விதித்த இந்திய கிரிக்கெட் சபையின் முடிவை ஏற்கனவே விமர்சித்த ஐ.பி.எல்.முன்னாள் தலைவர் லலித்மோடி தற்போது இந்தியக் கிரிக்கெட் சபையைக் கடுமையாக விமர்சித்து டுவிட்டர் இணையத்தளத்தில் கருத்துத் தெரிவித்துள்ளார். அதில் கூறியிருப்பதாவது;

எந்தவொரு நல்ல திட்டத்தையும் பாழடிக்க வேண்டுமென்று நினைத்தால் லலித்மோடி பின்னணியிலிருக்கிறார் என்று சொல்லிவிட்டால் போதும். எனது பெயரைச் சொல்லிவிட்டாலே இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகிகளுக்கு நடுக்கம் வருவது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது.

முதுகெலும்பு இல்லாத கூட்டம் இந்திய கிரிக்கெட் சபையை இயக்கி வருகிறது. எதனை செய்ய வேண்டுமென்று நினைத்தாலும் நான் முன்னின்று செய்வேன். பின்னால் இருந்து செயற்படமாட்டேன். நான் பின்னால் இருப்பதாக சொல்வதன் மூலம் உலகக் கிரிக்கெட்டில் என்ன நடக்கிறது என்பது கூட இந்திய கிரிக்கெட் சபைக்குத் தெரியவில்லை என்பதை காட்டுகிறது. தனது சொந்த நிழலை தாண்டி அவர்களால் பார்க்க முடியவில்லையென்றார்.

இந்த நிலையில் இவ்விடயம் தொடர்பாக இந்தியக் கிரிக்கெட் சபையுடன் பேச இலங்கைக் கிரிக்கெட் சபைத் தலைவரும் செயலாளரும் இந்தியா செல்லவிருந்தனர். இலங்கை விளையாட்டுத் துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயின் பணிப்பின் பேரில் இவர்கள் புதன்கிழமை அங்கு சென்று பேச்சுகள் நடத்தவிருந்தனர்.

எனினும் இறுதி நேரத்தில் இந்தச் சந்திப்பு கைவிடப்பட்டுள்ளது. இதற்கான சரியான காரணம் தெரிவிக்கப்படவில்லை. இந்தியக் கிரிக்கெட் சபையின் கடுமையான நிலைப்பாட்டினாலேயே இலங்கைக் கிரிக்கெட் சபை உறுப்பினர்களின் இந்தியப் பயணம் ரத்தானதாகக் கூறப்படுகிறது.

இந்திய வீரர்கள் இந்தத் தொடரில் பங்குபற்றுவதன் மூலம் அணிகளுக்கான அனுசரணையாளர்கள், விளம்பர அனுசரணையாளர்கள், தொலைக்காட்சி விற்பனை உரிமை மூலம் பெருமளவு நிதியை பெறலாமென நினைக்கும் இலங்கைத் தரப்பிற்கு இது பெரும் ஏமாற்றமாகவே



உள்ளது.

எனினும் இவ்விடயத்தில் தொடர்ந்தும் முயற்சிகளை இலங்கைத் தரப்பு மேற்கொண்டு வருகிறது.



# 'எனது குழந்தைகளை இறப்பதற்கு அனுமதியுங்கள்'

விதிக்குச் சவால் விடுக்கும் வகையில் விஞ்ஞானமும் மருத்துவமும் எவ்வளவோ நகர்வுகளை முன்னெடுத்து வருகின்ற போதும் விதியும் அவ்வப்போது தனது வலிமையைக் காட்டத்தான் செய்கின்றது.

ஏனெனில் பெற்ற மகள்களைச் சாவதற்கு அனுமதிக்குமாறு மன்றாடும் ஒரு தந்தை அனுபவிக்கும் அவலத்தை வேறு எப்படிக் கூறமுடியும்?

இதயத்தை நொருங்கச் செய்யும் அளவுக்கு வேதனையளிக்கும் இச் [illegible]தி ஒட்டிப்பிறந்த 15 வயதுடைய இரட்டைச் சகோதரிகளைப் பற்றியதாகும்.

இவர்கள் நாளாந்தம் படும் அவஸ்தையைப் பார்த்து வேதனையில் துடித்து விரக்தியின் விளிம்புக்கே சென்று விட்ட தந்தை, 'எனது சின்னஞ்சிறு மகள்களை சாக விடுங்கள். கருணைக் கொலைக்கு அனுமதியளியுங்கள்' என அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## உலக வலம்

ச.துஷ்யந்தினி

இந்தியாவின் பீகார் மாநிலத்தின் பட்னா நகரைச் சேர்ந்த மொஹமட் ஷகீல் என்னும் தந்தையே இந்திய அரசிடம் இக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

சபா மற்றும் பரா என்னும் இந்த இரட்டைச் சகோதரிகளின் வாழ்க்கை நாளாந்தம் வேதனை மிக்கதாக மாறி வருவதாகத் தெரிவிக்கும் இத் தந்தை இவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு அல்லது இவர்களை கருணைக் கொலை மூலம் மரணிப்பதற்கு அனுமதிக்குமாறு இந்திய அரசைக் கோரியுள்ளார்.

தலை ஒட்டிப் பிறந்த இச் சகோதரிகள் சிறுவயதில் பெரியளவிலான பாதிப்புகளின்றி வளர்ந்த போதும் அண்மைய வருடங்களாகக் கடும் தலைவலி, மூட்டு வலி மற்றும் சரிவரப் பேச இயலாமை போன்ற அவஸ்தைகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

நான்காயிரம் இந்திய ரூபாய்களையே மாத வருமானமாகப் பெறும் 8 பேரைக் கொண்ட ஷகீலின் குடும்பத்திற்கு இச் சிறுமிகளுக்குத் தேவைப்படும் மேலதிக நவீன சிகிச்சைகளுக்குப் பணம் ஏது?

இந்நிலையில் நான்கு வருடங்களுக்கு முன்னர் இச் செய்தியை அறிந்த ஐக்கிய அரபு இராச்சியத்தின் முடிக்குரிய இளவரசர் ஷேய்க் மொஹமட் பின் ஷயெட் உதவுவதற்கு முன் வந்தார்.

இவரது நிதியுதவியுடன் ஒட்டிப்பிறந்த இரட்டையர்களைப் பிரிப்பதற்கான சத்திரசிகிச்சையில் நிபுணத்துவம் பெற்ற பிரபல மருத்துவ நிபுணர்கள் இவர்களைப் பிரிப்பதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்ந்தனர்.

அந்தச் சமயத்தில் சிறந்த தேக ஆரோக்கியத்துடனும் மனத்திடமுடனும் இச் சிறுமிகள் மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட போது மூளையிலுள்ள அதி முக்கிய இரத்தக்குழாயில் ஒன்றையே இரு சிறுமிகளும் பகிர்ந்து கொண்டிருப்பதும் இருவரது உடலுக்கும் பொதுவாக இரு சிறுநீரகங்கள் மட்டுமே இருந்ததாகவும் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில் இருவரையும் பிரிப்பதற்கு ஆறு சத்திரசிகிச்சைகள் தேவைப்படுமெனவும் ஆனால் ஒவ்வொரு சிகிச்சையின் போதும் இருவரில் ஒருவர் உயிர்பிழைப்பதற்கு ஐந்தில் ஒரு வாய்ப்பே இருப்பதாகவும் மருத்துவ நிபுணர்கள் கூறினர்.

## விரக்தியின் விளிம்பில் நிற்கும் தந்தை ஒருவரின் வேண்டுகோள்



இதற்கான செலவீனத்தை இளவரசர் ஏற்பதற்கு முன் வந்த போதிலும் அபாயகரமான இம் முயற்சியில் இறங்கும் திட்டத்தை ஷகீல் கைவிட்டார்.

இந்நிலையில் 5 வருடங்களின் பின்னர் அதாவது தற்போது இச் சிறுமிகளின் நிலை மிகவும் மோசமடைந்துள்ளது.

இரு சிறுநீரகங்களை மட்டுமே இவர்கள் கொண்டிருப்பதனால் உயர் இரத்த அழுத்தத்திற்கு உள்ளாகி இருப்பதுடன் உடல் ரீதியாகக் கடும் வலிகளை அனுபவிப்பதாகக் கூறப்படுகின்றது.

ஏனையவர்களைப் போல் இச் சிறுமிகளும் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டுமென்றே விரும்புகின்றேன். ஆனால் இவர்கள் வலியால் துடிதுடித்து உதவிக்காகக் கதறுகின்றார்களெனத் துயரம் தோய்ந்த குரலில் கூறுகிறார் ஷகீல்.

இதேவேளை இவர்களது அவஸ்தையை விவரிக்கும் இச் சகோதரிகளின் மூத்த சகோதரர்;

இவர்கள் கண்விழித்திருக்கும் நேரமெல்லாம் வலியால் துடிக்கின்றனர். கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியான தலைவலி மற்றும் உடல்வலி என்பவற்றினால் அவதியுறுகின்றனர். மேலும் பேசுவதற்கும் கடும் சிரமப்படுவதுடன் இவர்களது அங்கங்கள் சிறிது சிறிதாக செயலிழந்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையிலேயே பரிதாபகரமான நிலையிலிருக்கும் தனது மகள்களுக்கு உதவுவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் அல்லது மரணிப்பதற்கு அவர்களை அனுமதிக்க வேண்டுமென இதயத்தைக் கசக்கிப் பிழியும் வேண்டுகோளை ஷகீல் விடுத்துள்ளார்.

சிகிச்சைகள் எதுவும் வெற்றியளிக்கப் போவதில்லை என்ற பட்சத்தில் சிறுமிகளின் அவஸ்தையைப் போக்குவதற்கான ஒருவழியாகவும் அவர்கள் படும் வேதனையைக் காணச் சகிக்காத ஒரு தந்தையின் விரக்தியின் வெளிப்பாடாகவும் நோக்கினால் இவ் வேண்டுகோள் நியாயமானதே.

ஆனால் நடைமுறையில் இது எந்தளவிற்குச் சாத்தியம்? இதில் சட்டத்தின் பங்கு எத்தகையது? இது தவறான முன்னுதாரணமாக அமைந்து விடாதா? இதற்கு இந்திய அரசாங்கம் கூறப்போகும் பதில் என்ன? என்பனவே தற்போது எழுந்துள்ள முக்கிய கேள்விகளாகும்.

கருணைக் கொலைக்கு சில நாடுகள் அனுமதியளிக்கின்ற போதும் இது தொடர்பில் பல விமர்சனங்களும் எழுப்பப்பட்டு வருகின்றன.

எது எவ்வாறிருப்பினும் பிள்ளைகளின் வளமான வாழ்வுக்காக உதவி கோருவதற்குப் பதிலாக அவர்களது சாவுக்கு உதவிகோரும் இத் தந்தையின் நிலைவேறு எவருக்கும் ஏற்படக்கூடாதென்பதே எமது பிரார்த்தனையாகும்.














இப்பத்திரிகை தினக்குரல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு 15, எலி ஹவுஸ் ரோட், 68ஆம் இலக்கத்தில் 2011ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.